
# அலை ஓசை

அலை 2 | மார்கழி 2003 | ஓசை 4



## குருநகர் சென். ஜேம்ஸ் பழைய மாணவர் சங்கத்தின் வெளியீடு

*'வாழ்வுக்கு வழிவகு - அறியாமை அகல கல்வியே அகல்'*

குருநகர் சென் ஜேம்ஸ்
பழைய மாணவர் சங்கம்

# அலை ஓசை



அட்டைப்படம்

**செல்வன். மிதுன் கமில்ரன்**
**(வயது 7)**

அலை 2

ஓசை 4

மார்கழி 2003

ஆசிரியர் :

**எமிலியானுஸ் ஜோய்**

**இதழ்க்குழு :**

**மனவல் அன்ரன்**
**குருசுமுத்து பீலிக்ஸ்**
**அலோசியஸ் கமில்ரன்**
**மைக்கல் அஞ்சலோ**

முகவரி :
**E. Judes**
7, Square des Anglaises
93800 Epinay Sur Seine
France
Tél. 00 33 (0)1 48 41 71 37
e-mail: kappiya@hotmail.com

**கணணி - அச்சுப்பதிப்பு**

**ஸ்ரீ பாரதி அச்சகம்**
பாரிஸ் - பிரான்ஸ்
00 33 (0)1 42 05 46 04

# எண்ணச் சிறகடிப்பு

வணக்கம்,

ஓராண்டை நிறைவு செய்து இரண்டாம் ஆண்டில் காலடி பதிக்கும் அலை ஓசை இதழின் தோற்றுவாய்க்கான நோக்கு சரியான பாதையில் பயணிக்கின்றதா என்ற ஆய்வு மேற்கொள்ளுதல் அவசியமானதாக இருக்கிறது.

நான் முதலாவது இதழில் குறிப்பிட்டதை மீண்டும் இங்கு ஆய்வுக்காக குறிப்பிடுகின்றேன். எமது அலைஓசையின் தோற்றத்திற்கான 3 அடிப்படைக் காரணங்கள்

1. வளர்ந்த, வளர்ந்துவருகின்ற, வளரத்துடிக்கின்ற எமது எழுத்தாளர்களுக்கு நிலையான தளத்தை உருவாக்கிக் கொடுத்தல்.
2. எமது பழைய மாணவர் சங்கத்தின் செயல்பாடுகளை செய்தியாக மக்களுக்கு தெரிவித்தல்.
3. இயந்திர உழைச்சலுக்குள் வாழ்ந்தாலும் எமது இருத்தலுக்கான பதிவுகளை மேற்கொள்ளுதல்

முதலாவது காரணியை எடுத்து நோக்குவோமாயின் எம்மால் வெளியிடப்பட்ட மூன்று இதழ்களிலும் வெளியாகியிருந்த பெரும்பாலான ஆக்கங்கள் எமது மக்களாலேயே எழுதப்பட்டிருந்தமை பெருமைக்குரிய விடயமாகும். அதுமட்டுமல்லாமல் ஒவ்வொரு இதழிலும் வெளியாகும் அட்டைப்படம் எமது பிள்ளைகளாலேயே வரையப்படுகின்றது. எனவே எமது முதல் நோக்கு சரியான பாதையில் பயணிக்கிறதாக நான் கருதுகிறேன்.

இரண்டாவது காரணியை எடுத்து நோக்கினால் அதுவும் சரியான பாதையிலேயே பயணிக்கிறது. எமது பழைய மாணவர் சங்கத்தால் குருநகரில் உள்ள கல்வி முன்னேற்றக் கழகத்தினூடாக செயல்படுகின்ற அனைத்து செயல்பாடுகளையும் செயற்பாட்டறிக்கையாக வெளியிட்டிருந்தமையை நீங்கள் படித்திருப்பீர்கள். இதன்மூலம் எமது நிர்வாகத்திற்கும் எமது மக்களுக்குமிடையே தொடர்பை ஏற்படுத்தியிருக்கின்றோம்.

மூன்றாவது காரணிக்கு நான் பதிலளிக்க வேண்டுமாயின் எனக்கு இன்னும் சில ஆண்டுகள் அவகாசம் தேவை. ஏனெனில் இப்போதுதான் நாம் அடுத்தவர் கைபிடித்து நடக்க ஆரம்பித்திருக்கின்றோம். சுயமான சிந்தனையோடு, வேகமான நடையோடு, காத்திரமான படைப்புக்களோடு எமது இதழ் வெளிவரும் நாளில் எமது இருத்தலுக்கான பதிவுகள் தானாகவே மேற்கொள்ளப்படும்.

எமது வளர்ச்சிக்கு சகல விதத்திலும் ஒத்துழைப்பு நல்கும் அனைத்து உள்ளங்களுக்கும் இந்நேரத்தில் நன்றி கூறக்கடமைப்பட்டுள்ளேன்.

'Slow and steady win the race' என்று சொல்லப்படுவது போல் எமது நகர்வு ஆமை வேகத்தில் சென்றாலும் இலக்கு நோக்கிய பாதையில் சரியாக பயணித்து வெற்றிக்கோட்டை அடையும் என்பதில் நான் உறுதியாக இருக்கின்றேன்.

தேடல் உள்ள மனதில்
தெளிவு பிறக்கும்
தெளிவு பிறந்தால்
வாழ்க்கை இனிக்கும்
இனிக்கும் வாழ்வை
உனக்குரியதாய் மாற்ற
தேடல் கொள்வீர்.

அன்புடன்
**எ. ஜோய்**
இதழ் ஆசிரியர்.

# மண்ணின் மகள்

கலைநகராம் குருநகரின் மடியினில் 04.02.1962இல் மழலையாய் தவழ்ந் தவர் தனது ஆடல் கலைமூலம். படிப்படி யாக உயர்ந்து இன்று மண்ணின் மகளாக மலரும் மடோனா தேவா அவர்கள் குருநகர் மண்ணுக்கு பெருமை தேடிக் கொடுத்தவர் என்ற ரீதியில் அவரை இந்த இதழில் கௌரவப்படுத்துவதில் எமது சங்கம் பெருமை அடைகிறது.



3ம் வகுப்பிலிருந்து ஆரம்பிக்கப்பட்ட இவரது பரதநாட்டியம் பல சாதனைக ளைக் கடந்து புலப்பெயர்வின் நெருக் கடிகளுக்குள்ளும் தனது பிள்ளைகளு க்கு நேரம் கிடைக்கும் போதெல்லாம் கற்பித்து வருகின்றார். இவர் தனது ஆரம்பக் கல்வியை குருநகர் சென். ஜேம்ஸ் மகளீர் பாடசாலையிலும், உயர் கல்வியை யாழ். கன்னியர் மடம் பாடசாலையிலும் (JAFFNA TAMIL CONVENT) பயின்றார். இவரும் இவரது சகோதரி மேரி ஸ்ரெலாவும் சுமார் 6 வருடங்களாக நாட்டியப் பேரொளி நடன் கலாமயில் திருமதி லீலா நாராயணன் ஆறுமுகையா அவர்களிடம் முறைப்படி பரதம் பயின்று, 1980ம் ஆண்டு வைகாசி மாதம் 9ம் திகதி

## ஆடல் அரசி - இசைக் கலைமணி
## மேரி மடோனா தேவா

யாழ்.வீரசிங்கம் மண்டபத்தில் வணக்கத்துக்குரிய ஆயர் தியோகுப்பிள்ளை ஆண்டகை மற்றும் பேராசிரியர் கைலா சபதி இன்னும் பல பெரியோர்கள் முன்னிலையில் இவரதும் இவரது சகோதரியினதும் பரதநாட்டிய அரங்கேற்றம் சிறப் பான முறையில் எல்லோரும் வியந்து பாராட்டும் வகையில் அரங்கேற்றப்பட்டது. அரங்கேற்றத்தைத் தொடர்ந்து இவரது சகோதரி சென். ஜேம்ஸ் பாடசாலையிலும் தனது வீட்டிலும் தனது நடன வகுப்பை நடாத்தி வந்தார்.



மேலும், மடோனா அவர்கள் 1975ம் ஆண்டு சுவாமி ஞானப்பிரகாசர் நூற்றா ண்டு நிறைவு விழாவில் அனைத்து ஈழரீதியில் நடாத்தப்பெற்ற மாணவியர் நாட்டிய இறுதிப் போட்டியில் பங்குபற்றி இரண்டாம் இடத்தைப் பெற்றதுடன், 1981ம் ஆண்டு குருநகரில் நடைபெற்ற சுவாமி ஞானப்பிரகாசர் முத்திரை வெளியீட்டு விழாவில் தனது பரத முத்திரையைப் பதித்து சான்றிதழும் பெற்றார். பின் வட இலங்கை சங்கீத சபையின் வருடாந்தப் பரீட்சையில் 1982, 1983ஆம் ஆண்டுகளில் வாய்ப்பாட்டிலும், வீணையிலும் முதலாம் பிரிவில் விசேட சித்தியும் பெற்றார். அத்தோடு நின்றுவிடாமல் 1984ல் இந்தியா சென்று Tamil nadu Government Music college ( ADIYAR - MADRAS) இல் 3வருடங்களாக வீணையும் வாய்ப்பாட்டும் பயின்று "இசைக் கலைமணி" என்ற சங்கீத வித்துவான் பட்டமும் பெற்றார்.

இவரது இளமைக் காலங்களில் இவரால் அரங்கேற்றிய நாட்டிய நிகழ்வு களும், இவர் அரங்கேறிய மேடை நிகழ்வுகளும் பலப்பல. அவற்றில் சிலவற்றை இன்றும் நினைவு கூருகின்றார். திறந்த வெளி அரங்கத்தில் கல்வி அமைச்சர் வந்த போதும், சீனோரில் கடற்தொழில் அமைச் சர் வந்தபோதும் நடனமாடி பாரா ட்டுக் களைப் பெற்றவர். ஒருமுறை நெல்லி யடியில் நடனம் செய்தபோது பல்கலைக்கழக விரிவுரை யாளர் பொன்னாடை போர்த்தி மலர்ச்செண்டு வழங்கி "ஆடல் அரசி" என்ற பட்டத்தை வழங்கினார்.

வீரசிங்க மண்டபத்தில் பல்லாயிரக்கணக்கான மக்கள் முன்னால் பஞ்ச வாத்தியத்திற்கு நடனம் செய்து எல்லோர் மனங்களிலும் இடம் பிடித்தார்.

**முத்து முத்தான சித்திரங்கள் எங்கள்**
**முற்றத்தில் சிந்திய இரத்தினங்கள்**
**பற்றும் பாசமும் வைத்தன வற்றை**
**பேணிக் காப்பது நம் கடமை**

என்ற பாடல் வரிகளுக்கமைய தன்னை பேணிப்பாதுகாத்த பெற்றோரையும் இவர் நினைக்காத நாளில்லை. தனது இத்தனை உயர்வுக்கும் தனது பெற்றோரே காரணம் என்று அவர் அடிக்கடி கூறுவார். இவரது தந்தை மறைந்து 20 வருட நினைவாண்டில் இவரை எமது சங்கம் கௌரவிப்பதை எண்ணி பெருமிதத்தோடு நன்றி கூறு கின்றார்.


**மலர் சொல்லும் நன்றி தேனாகுமே**
**வான் செல்லும் நன்றி மழையாகுமே**
**நிலம் சொல்லும் நன்றி பயிராகுமே**
**நாம் சொல்லும் நன்றி இதுவாகுமே**

என்ற நன்றிப் பாமாலையை தனது தந்தைக்கு காணிக்கையாக்குகின்றார். ஆடற் கலையில் பல சாதனைகளைப் புரிந்து தனக்கும், எமது மண்ணுக்கும் பெருமை தேடித் தந்த மடோனா தேவா அவர்களின் கலை வாழ்வு சிறக்க எமது சங்கம் வாழ்த்தி நிற்கின்றது.

# 13 வது மனிதன்

உன் துயிலைக் கலைப்பதற்காய் என்னை மன்னித்து விடு. நான் சொல்வதை அவர்களிடம் சென்று கூறுவதற்காய் உன்னை நான் தேர்ந்தெடுத்திருக்கிறேன். இன்றுமுதல் நீ என்னால் தேர்ந்தெடுக்கப்பட்டவனாகிறாய்.

என்னை அவர்கள் சிலுவையில் அறைந்து இருபது நூற்றாண்டுகள் ஆகிவிட்டன. இரண்டாயிரம் வருடங்களாக அவர் கள் என் பிறப்பைக் கொண்டாடுகிறார்கள். புதிய உடன்படிக்கையி னால் மனிதர்களின் பால் கொண்ட அடங்காத அன்பினால் அவர்களின் பாவங்களை மீளப்பெறுவதற்காக நான் சிலுவையில் மாண்டேன். இந்த மனிதர்களின் சுபீட்சத்திற்காய் நான் மரித்த அடுத்த நாளே இவர்கள் என் போதனைகளைப் பரப்ப ஆரம்பித் தார்கள்.



மேற்குலகின் வீதிகள் எங்கும் நான் அறையப்பட்ட சிலுவையைப் பார். எனக்காக இவர்கள் கட்டியெழுப்பியிருக்கும் உயர்ந்த வழிபாட்டிடங்களைப்பார். என் போதனைகளைப் பரப்புவதற்காக ஒழுங்கமைக்கப்பட்டிருக்கும் 'பெரும்படையை' ப் போல் ஒரு படை இன்று வரையிலும் எந்த அரசாலும், எந்தச் சக்கரவர்த்தியாலும் உருவாக்கப்படவில்லை. அதற்காக இவர்கள் செலவிடும் பணத்தின் தொகை பாரியது.

என்பெயரால் எத்தனை இன அழிப்புகள் நடந்தன. அமெரிக்க ஆதிக்குடிகள் பூண்டோடழிக்கப்பட்டார்கள். கோடிக்கணக்கான ஆபிரிக்கப்பிரஜைகள் அடிமைகளாக்கப்பட்டு, வேரோடு பிடுங்கப்பட்டு, அவர்களில் பல்லாயிரக்கணக்கானோர் சித்திரவதை செய்யப்பட்டுக் கொல்லப்பட்டார்கள். என் போதனையின் பெயரால், அவற்றை மதிக்க வைக்க வேண்டும் எனும் சாட்டுகளால், கிறிஸ்தவர்கள் எனத் தமைப் பிரகடனப்படுத்தும் இவர்கள் தங்களுக்குள் தாங்களே கொலையுண்டார்கள். என் உபதேச நூலை ஒரு கையிலும் வாளை மறுகையிலும் ஏந்தி அன்பை உபதேசித்த இந்த மனிதர்களின் கொடூரம் எல்லையற்றது.

இன்றைய உலகின் தலைவிதியை நிர்ணயிக்கும் பலம்கொண்ட மேற்குலகம் கிறிஸ்தவத்தின் பெறுமானங்களில் நிறுவப்பட்டதாக இவர்கள் கூறிக் கொள்கிறார்கள். இரண்டாயிரம் வருடங்களாக தேவாலயம் தோறும் இவர்கள் என் 'உடலை' உண்கிறார்கள், என் 'உதிரத்தைப்' பருகுகிறார்கள். இருந்துமென்ன, இவர்கள் ஆக்கிவைத்திருக்கும் உலகம் அநீதிகளால் நிரம்பி வழிகின்றது. முகப்பை அலங்கரிக்கும் சோடனைகளாக என் போதனைகளை இவர்கள் மாற்றிவிட டார்கள். 'ஞாயிற்றுக்கிழமைக்' கிறிஸ்தவத்தால் தம்மைத் திருப்திப்படுத்திக் கொள்ளும் இவர்கள் நடைமுறையில் என் போதனையின் கொலையாளிகள்.

அன்புதான் பலமென்று நற்செய்தி கூறினேன், இவர்களோ ஆயுதவியாபாரிகளாகி உலகெங்கும் கொலைவெறியாட்டம் நடாத்துகிறார்கள்.

நேற்று நடந்ததைப் பார்த்தாயா? கிறிஸ்தவ மேற்குலகு எவ்வாறு என் பிறப்பைக் கொண்டாடிற்று என்பதைப் பார்த்தாயா? என் பெயரால் நேற்று நடந்தது களியாட்டம். மதுவிற்பனை ஒரே வாரத்தில் எத்தனை மில்லியன்களுக்கு விற்பனையாகியது? உண்பண்டங்கள் ஒவ்வொரு வீட்டிலும் தெவிட்டத் தெவிட்ட ஆயத்தமாகியது. இன்று காலை இவர்கள் குப்பைத் தொட்டிகளில் எறிந்த மீதி உணவின் பரிமாணத்தைப் பார்த்தாயா ?

நேற்றும் கூட, ஆமாம், நேற்றும் கூட, கிறிஸ்தவ மேற்குலகின் டிசம்பர் மாதக் குளிர் வீதிகளில் வீடற்றோர் அலைந்தார்கள். நேற்றும் கூட, கிறிஸ்தவ மேற்குலகின் டிசம்பர் மாதக் குளிர் வீதிகளில் 'விசா' அற்றோர் பொலிசுக்கு அஞ்சி திருடர்கள் போல் திரிந்தார்கள். நேற்றும் கூட, கிறிஸ்தவ மேற்குலகில் வாழ் அந்நியர்கள் நாய்களைப் போல் அவமானப்படுத்தப் பட்டார்கள். நேற்றும் கூட, கிறிஸ்தவ வெள்ளை மேற்குலகின் நிறவெறி திமிர்காட்டியது. நேற்றும் கூட, கிறிஸ்தவ மேற்குலகின் நாடான

**– செபஸ்ரியான் –**

பிரான்ஸில் விசாவற்ற வெளிநாட்ட வருக்கு இலவச மருத்துவச் சிகிச்சை இல்லையென பாராளுமன்றத்தில் சட்டநிறைவேற்றம் செய்யத் திட்டம்தீட்டினார்கள். நேற்றும் கூட, கிறிஸ்தவ மேற்குலகில் ஏதுமறியாத இளைஞர்கள் இஸ்லாமியராகப் பிறந்த ஒரே குற்றத்திற்

காக அவமானப் படுத்தப்பட்டுத் தண்டிக்கப்பட்டார்கள், நேற்றும் கூட, கிறிஸ்தவ மேற்குலகின் வயோதிப மடங்களில் மனிதர்கள் தனிமையில் வாடினார்கள். நேற்றும் கூட, கிறிஸ்தவ மேற்குலகின்....

என் போதனைகள் எல்லாம் முகப்பை அலங்கரிக்கும் சோடனைகளாகிவிட்டன. சோடனைகளின் பின்னால் இவர்கள் உலகெங்கும் மேடையேற்றும் துன்பியற் கொடூரங்கள் என் பெயரால் நடந்தேறுகின்றன.

பன்னிரண்டு அப்போஸ்த்தலர்களிடமும் நான் கையளித்த காரியம் தோல்வி கண்டுவிட்டது. எத்தனை தடவை நான்சிலுவையில் மாண்டாலும் இவர்களின் பாவங்களை என்னால் இனி மீளப்பெறமுடியாதென்பதை அறிந்தோ என்னவோ இவர்கள் என்னைத் தினமும் சிலுவையில் கொல்கிறார்கள். பார்க்குமிடமெல்லாம் சிலுவைகளை நிறுத்திவைத்திருக்கிறார்கள். உங்களில் சிறியவர்களுக்கு நீங்கள் இழைப்பதை எனக்கிழைக்கிறீர்கள் என்று இவர்களிடம் கூறிவைத்தேன். இதையுணராத இவர்கள் தினமும் என்னைச் சித்திரவதை செய்கிறார்கள். எனது தந்தையின் சாம்ராச்சியத்தில், இவர்கள் மீது கொண்ட அடங்காத அன்பு காரணமாக நான் துன்புறுகிறேன், சித்திர-வதைப்படுகிறேன்.

உறக்கத்திலிருப்பவனே, துயிலெழு. பன்னிரண்டு அப்போஸ்த்தலர்களாலும் நான் அனுப்பிய நற்செய்தி இன்றுமுதல் காலாவதியாகிவிட்டதென்று உலகெங்கும் பறையறைந்து கூறு. யாருடைய பாவத்திற்காகவும் இன்றுமுதல் நான் மரிக்கமாட்டேன் என்று கூறு. பாவிகளுக்கான சம்பளம் மரணம் என்பதை மீண்டும் மீண்டும் கூறு.

அநீதி நிரம்பி வழியும் நகரங்கள் எல்லாம் நரகங்களாகும் நாள்கள் நெருங்கிக் கொண்டிருக்கிறது. அன்பின் பெயரால் அநியாயங்களைப் பூமியெங்கும் விதைப்பவர்கள் என் ஆலயங்களுக்குள் பிசாசுக்குப் பலிப்பூசை கொடுப்பவர்கள். இவர்களுக்கான தண்டனைக்காலம் நெருங்கிக் கொண்டிருக்கிறது. என் தந்தை இவர்களுக்காகச் சிருஷ்டித்த ஆறுகளை மாசுபடுத்திவிட்டார்கள். என் தந்தை இவர்களுக்காகச் சிருஷ்டித்த காற்று மண்டலும் அசுத்தப்படுத்தப்பட்டுவிட்டது. அறிவையும் சிந்திக்கும் சுதந்திரத்தையும் என் தந்தை இவர்களுக்குப் பரிசாக வழங்கியும், நன்றிகெட்ட இம்மனிதர்கள் அவற்றை அணுகுண்டுகளை உருவாக்கவும், கொடிய ஆயதங்களைக் கண்டுபிடிக்கவும் பயன்படுத்தினார்கள். பணத்திற்காகப் பணம் தேடும் இவர்களின் முடிவுக்காலம் நெருங்கிவிட்டது.

உறக்கத்திலிருப்பவனே, துயிலெழு. பன்னிரண்டு அப்போஸ்த்தலர்களாலும் நான் அனுப்பிய நற்செய்தி இன்றுமுதல் காலாவதியாகிவிட்டதென்று உலகெங்கும் பறையறைந்து கூறு. யாருடைய பாவத்திற்காகவும் இன்றுமுதல் நான் மரிக்கமாட்டேன் என்று கூறு. பாவிகளுக்கான சம்பளம் மரணம் என்பதை மீண்டும் மீண்டும் கூறு.

என் போதனைகளைச் சோடனைகளாக எண்ணாது, என் தந்தையின் சொத்தான இவ்வுலகத்தை மாசுபடுத்தாது இன்னமும் இருக்கும்மனிதர்களையும், ஏழைகளையும், உணவிற்காக உடலைவிற்பவர்களையும், நோயுபாதையில் அல்லலுறுபவர்களையும், தனிமையில் வாடுபவர்களையும், சிறியவர்களையும், பரிசுத்தமானவர்களையும், அப்பாவிகளையும், அநியாயத்திற்குப் பலியாகியவர்களையும் அணுகி அவர்களிடம் பின்வருவனவற்றைக் கூறு:

என்பெயரால், எனக்காக, இவ்வுலகில் நீதியை நிலைநிறுத்துவதற்காய், என் கட்டளையின் பேரில், இப்போதிருந்தே இறப்பவர்கள் பாக்கியவான்கள். பரலோக ராஜ்ஜியத்தின் கதவுகள் அவர்களுக்காய் என்நேரமும் திறந்திருக்கிறது. அவர்கள் சிலவேளைகளில் அநீதி நிறைந்த இப்பூமியில் 'பயங்கரவாதிகள்' என அழைக்கப்படலாம். ஆனால், என் போதனைகள் மதிக்கப்படும் வரை அவர்கள் போராடவேண்டும். எனது தந்தையின் சீற்றம் இங்கு இனிப் பயங்கரங்களாகப் பரிணமிக்கப்போகிறது. இதற்காக என் தந்தையின் கட்டளைகளை நிறைவேற்றுபவர்கள் பாக்கியவான்கள்.

பதின்மூன்றாவது மனிதனே, துயிலெழு. சீற்றம் கொண்ட என் கொடும் செய்தியை உலகெங்கும் பறையறைந்து சொல்.

தூக்கம் கலைந்து கட்டிலில் நிமிர்ந்திருந்து நெற்றியைத் தொட்டேன். உடலெங்கும் வியர்த்திருந்தது.

## வாய்மையால் தூய்மை பெற....

உள்ளத்தால் உண்மையுடையவனாய் இரு. தீமை உன்னை மேற்கொள்ளாது.

சிறு சிறு காரியங்களிலும் உண்மையாக நடப்பதே தூய வாழ்வு பெறுவதற்கான இரகசியமாகும்.

உண்மை தானாகவே வேலை செய்யும். அதனிடமே ஆற்றல் உண்டு. எனவே எவ்வளவுதான் உன்னைப் பற்றித் திரித்துச் சொன்னாலும் கலங்காதே.

குலமும் குடியும் பெருமை தருவதில்லை. உயர்வு தருவன உண்மையும் ஒழுக்கமுமே.

**- டொறத்தி யேசுநாயகம்**

ஒரு மனிதன் எவ்வாறு மற்றவர்களை விமர்சனம் செய்கிறானோ அவ்வாறு அவனும் விமர்சிக்கப்படுகிறான்.

- சாமுவேல் ஜான்சன்

# ஓ என்னுயிர் குருநகர்....

கவிஞர். மா. கி. கிறிஸ்ரியன்

இதுதான் நான் பிறந்த
குருநகர் மண்
புழுதிதான் சந்தனக் குழம்பாக
புரண்டிட வீசும் நறுமணம்

மீசை முளைக்காத வயதில்
ஆசைக்கு அளவேது எங்கள்
கடலுக்குள் நீச்சல் கற்றுக்க
சேறுதான் இறங்கப் பயமில்லை

விடிகாலை நேரத்து இரைச்சல்கள்
காதுக்கு இனிதான பல்லவிகள்
காகம் கரையு முன்னர் விரையும்
தொழிளாளர் எழும்பும் சரணம்

நெய்தல் நிலத்து நேர்மையில்
மையல் கொள்ளும் கதிரவனும்
புல்லினங்களின் பூபாளப் பூரிப்பில்
குளிர்புனல் ஆடிப்பாடும் குருநிலம்

வலையோடு வீரம்பேசும் மறவரின்
அலைகடல் தாலாட்டு அம்பாவும்
ஆயிரம் கதைகள் பாடுமோர்
பருவத்துக் காதலின் வெண்பா

இதயக் கூட்டுக்குள் இருத்தி வைத்த
துறைமுகம் அமர்க்களப்படும் ஆனந்தத்தில்
கெட்ட வார்த்தை எத்தனையுண்டோ
அத்தனையும் கற்றுக் கொண்ட கலையகம்

உயிரினும் இனிய நண்பர்களோடு
உலவிய பாலத்தோடு பெண்கடல்
தழுவிடும் சின்னலைச் சங்கீதமும்
மாலைநேரக் களிப்பின் தவப்பேறு

அலைகள் முத்தமிடும் கரையினில்
சத்தமிட்டு வாழ்ந்த வாழ்வில்
அரைகால் சட்டையுடன் உலவிய
ஊரை நான் சாவதற்கு முன் காணவேண்டும்

குடிமனைகள் நடுவில் பள்ளிக்கூடம்
சொல்லிட வெக்கம் அத்துக்கம்
நித்தமும் விதவிதச் சடங்குகள்
ஒலிபெருக்கிச் சத்தமே தொல்லை

இதுதான் குருகுலக் கல்விக்கு
ஜென்மப் பகைவன் தீரும் நாள்
விரைந்தோடி ஊருக்கு வரவேண்டும்
நிகழ்கால எதிர்காலம் பயனடையும்

ஆறுவயதில் கடல்மடி தேடும்
ஏழ்மை நிலைகள் நீங்க வேண்டும்
கல்வியில் கீழ்மை நிலையகன்று
அழகாகப் பள்ளி செல்லக் கண்டோம்

இப்போது உள்ள பள்ளிக் கட்டிடம்
மாற்றம் கண்டு எழில் அமைதிச்
சூழலில் அமைந்திடல் நன்றெனக்
கொண்டு பணிதொடர்தல் கடமை

நல்ல நிலைகளை நிகர்த்திடும்
வல்ல தலைமுறை எழுந்து வரும்
உள்ள குறைகள் மறைந்தோட
உண்மைப் பணிசெய்தல் உயர்வதரும்

பழியாக நின்றிடும் கல்வியின்மை
ஒழிந்து குருநகர் புகழோங்கிட
சலியாது சேவகம் மேற்கொள்ளல்
மண் மைந்தர் புனிதக் கடமையாகும்

பழியைத் துடைக்கும் வழிகளை
படைக்கும் நெறிகளே குறியெனும்
வழிகள் வகுத்துச் செயல்படுத்தல்
முறையே குருநகருக்கு நன்மைதரும்

தேர்ந்த கல்வி ஞானமெய்தி
வாழும் இந்நாள் வரும்போது
வீரர் தோன்றிய மண்ணின் மகிமைகள்
பெருமைகள் பாடிக் களித்திடுவோம்

தன்னலம் கருதாத நிலையினில்
வீடும் ஊரும் நாடும் போற்றும்
வருங்காலம் உருவாகும் போதினிலே
கலைநகர் புகலரிய பூரிப்படையும்

குழந்தைகள் எதிர்காலம் என்றுமே
தாயின் செயலில் அடங்குதல் போல
நாளை உலகின் நல்லோரின் கைகுலுக்கி
நாமனைவரும் உயர்வோம் உண்மையே

தூரத்தில் இல்லை விடிவெள்ளி
தியாகத் தீரர்கள் நிகர்த்துவர்
தொலைந்து போனந்த வாழ்வெல்லாம்
கைகூடிவரக் கவிதையில் மழை பொழியும்

புயலைக் கண்டு பூரிப்பவன் - நீ
கயல் கொண்ட மானிடம் - தினம்
விடைபெற்றுச் செல்லும் - கடல்
மடியும் ஆடுபந்தாட்டக் களம்

அத்தானவன் வரும் வேளைவரை
காத்திருப்பு நெய்தல் மகளிரின்
பூவிழிவாசல் கடலோரக் காவியம்
சோகப் பாடலற்ற அகம் - புறம்

அலைமோதி அழியும் மணல்வீடு
கட்டும் மனத்தானல்ல கடல்வீரர்
சமுத்திரத்தை குடிநீராய்க் கண்டுவரும்
திடந் தோள்கண்ட குணத்தாளன்

வீடுகள் வீதிகள் ஒழுங்கைகள்
நான் உலவிய போதான அழகோடு
மீண்டும் எழில் பொழிய வேண்டும்
கலைத்தேன் பருகி வண்டாய்ப் பறப்பேன்

சிட்டங்கி வளவுதொடர் நீண்டுநின்ற
அலரிமரப் பூக்களின் நெரிசலும்
கட்டைச் செவ்விளநீர்தென்னைகளும்
மீண்டும் உயிர்பெறத் தவமிருப்பேன்

கற்றாழி நாகதாழி கீரைகள்
மருந்தான மூலிகை முளைத்தகாடு
அழகுச் சோலையில் - அத்துமீறிய வீடுகள்
அழித்துவிட்டுத் தென்னைகள் வைப்போம்

சமூக அமைதியில் இன்பமும்
பண்பும் பயனும் பெற்றிடவே
ஊரையாளும் முறையுடன்
ஊருக்கு மேன்மையுறத் திகழ்வோம்

இளைய செடிகள் தளைவுறவே
துன்பமும் நீங்கிடும் கருமத்தில்
முற்றத்து வாசம் வீசிட அண்டை
அயலாருக்கும் உபகாரங்கள் செய்வோம்

மேடை போட்டாடும் கூத்துக்கள்
அரங்கேற வேண்டும் - அந்தநேரம்
அதரம் மீதில் வந்த புன்சிரிப்பு
சேதாரமின்றி இனித்திடும் சொர்க்கம்

சேர்ந்தாடும் நண்பரும் தருவார்
நாட்டாரும் குழாமாய்க் கூடுவர்
பாவையர் பார்வைகள் பலவிரிப்பு
பாதகமற்ற காதலருக்கு இந்திரவிழா

காலத்துக் கூத்தினையும் கண்டோம்
இந்தக் கால காதல் மோதல் காட்சியாய்
குருநகர் கலையரங்கக் கலைமாட்சி
வசந்தகால மஞ்சத்தின் தஞ்சமாகும்

தமிழ் சுரந்தளித்த செந்தமிழ்தாயவள்
சங்கத் தமிழ் மூன்றும் ஈந்து தந்ததை
தலைமுறை எந்நாளும் உயிரின்
உணர்வாய்க் காத்திட வேண்டும்

நான் பாடுமிந்தப் பாடல்கள்
என்னுயிர்க் குருநகரின் வாழ்வைத்
தொட்டு இன்பமுற இசையெழுப்பி
தாளம் தப்பாத வாழ்வமைக்கும்

ஊர் நிர்வாகத் திட்டங்களும்
நேர்வளம் மிக்கதாய் நடைபெற
தொழில்துறை கல்விச் செல்வங்களுடன்
இனித்திருக்கும் புனிதநிலை தோன்றும்

கலந்துவிட்ட உறவுகளின் உணர்வில்
சமுதாய ஒற்றுமையும் தோன்றும்
வறுமையின் பேதங்கள் போய் உயர்ந்த
எழில் பொழியும் குருநகராய் இனிமிளிரும்.

# வாசகர் கடிதம்

அன்புடன் ஆசிரியர் அவர்கட்கு,

தங்களது அலை ஓசை கையில் கிடைத்ததும் எல்லையில்லா மகிழ்ச்சியில் என் உள்ளம் துள்ளியது. நூலினுள் புகுமுன்னே இது எனது என்னும் மனநிலையை அலை ஓசை ஏற்படுத்தியது. கூடவே எனது ஊரின் நினைவும் கண்முன் வந்து போனது. இதழை விரித்து வாசித்தபோது விபரிக்க முடியாத உணர்ச்சி என்னுள் இழையோடியது. ஓசையினுள் பரவியிருந்த ஆக்கங்கள் மிக மிக அருமை. ஓசையின் நடுப்பகுதியில் முற்றத்து வாசம் கலைவிழாவின் புகைப்படங்களும் விமர்சனமும் கண்டு மகிழ்ந்தேன். புகைப்படங்கள் தெளிவாக இருந்தன. அத்துடன் மண்ணின் மகள் குழந்தைக் கவிஞர் திருமதி. ஜெயந்தி ஜீவாவின் ஆற்றல் கண்டு வியந்தேன். அவரை சுவிஸ் வாழ் குருநகர் மக்கள் சார்பிலும் வாழ்த்தி வரவேற்கின்றேன். இவர் போன்று இன்னும் பலர் எம் மத்தியில் உள்ளனர். அவர்களையும் இனம் கண்டு வெளிக்கொணர வேண்டும். எமது சமுதாயம் ஒரு முன்மாதிரியான சமுதாயமாக வளரவேண்டும். அதற்கு தாங்கள் புரியும் பணிகளுக்கும் எனது நன்றிகளையும் வாழ்த்துக்களையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

வாழ்க தமிழ்! வளர்க அலை ஓசையின் ஆர்ப்பரிப்பு.

அன்பு வாசகன்
**வின்சன்ட் பீற்றர் டியூக்**

# மனிதம் மரிக்கிறதா?

என் இரயில் பயணம் ஒரு சுவாரஸ்யமான வாழ்க்கைப் பயணம் நான் வாழ்க்கையை வெளியில் படித்ததைவிட இரயிலுக்குள்ளேதான் அதிகமாகப் படித்தேன். படித்துக் கொண்டிருக்கிறேன். ஒவ்வொரு நாளும் பல சுவாரஸ்யங்கள் நடக்கும். நான் இரயிலுக்குள் ஏறினால் அங்குள்ளவர்களுக்குத் தெரியாமல் அவர்களின் பழக்கவழக்கங்களை அவதானிக்கத் தவறுவதில்லை.

அப்படித்தான் ஒருநாள் இரயிலில் போய்க் கொண்டு இருந்தேன். நான் இருந்த இருக்கைக்கு சற்றுத்தள்ளி ஒரு பிரஞ்சு நாட்டு இளைஞன் அமர்ந்திருந்தான். நான் இருந்த பெட்டிக்குள் கிட்டத்தட்ட 50 பேராவது இருந்திருப்பார்கள். எல்லோருமே வேறு வேறு இனத்தவர்கள். இனத்தாலும் மொழியாலும் வேறுபட்டு இருந்தாலும் ஒரே பெட்டிக்குள் பயணித்துக் கொண்டிருந்தோம். எனக்கு சற்றுத் தள்ளி இருந்த அந்த பிரஞ்சு வாலிபன் தனது கைத்தொலை பேசியில் பேசிக்கொண்டிருந்தான். அவன் வைத்திருந்தது புதிதாக வந்த அழகான தொலைபேசி அதை நான் உற்று உற்றுப் பார்த்தேன். அதை நான் வாங்க வேண்டுமானால் என்னுடைய ஒன்றரை மாத சம்பளத்தைக் கொடுக்க வேண்டும். எட்டாத பழம் புளிக்கும் என்பது போல என் ஆசைக்குத் தடை போட்டேன். அப்போது ஒரு புகையிரத நிலையம் வந்தது. அந்த நிலையத்தில் 3 ஆப்பிரிக்க வாலிபர்கள் ஏறினார்கள். ஏறியவர்கள் தொலைபேசியுடன் இருக்கும் பிரஞ்சு இளைஞனைக் கண்டவுடன் அவன் அருகே சென்று அவனை இருவர் பிடிக்க மூன்றாமவன் தொலைபேசியைப் பறித்துக் கொண்டு அடுத்த நிறுத்தத்தில் இறங்கி சென்றுவிட்டார்கள். தொலைபேசி பறிக்கும் போது இளைஞன் தன்னைக் காப்பாற்றும்படி குரல் கொடுத்தான். நான் உட்பட யாருமே இருக்கையில் இருந்து நகரவில்லை. இரயில் வண்டி ஓடிக்கொண்டு இருந்தது. அந்த இளைஞன் ஆவேசமாக எழுந்து வண்டிக்குள் இருந்தவர்களைத் திட்ட ஆரம்பித்தான். இன்றைக்கு எனக்கு நடந்ததுதான் நாளைக்கு உங்களுக்கு. இன்றைய சம்பவத்தை எல்லோரும் சேர்ந்து தடுத்திருந்தால் நாளை அவர்கள் இந்தப் பாதையால் வரமாட்டார்கள். எல்லோரும் தான் தப்பினால் போதும் என்று மௌனிகளாக இருந்து விட்டீர்கள். உங்களைப் போன்ற அக்கிரமங்களை ஆதரிக்கிறவர்கள் எங்கட நாட்டில் இருக்கிறதை எண்ணி நான் வெட்கப்படுகிறன். அவன் பேசிய அத்தனையும் நியாயமானவை. ஆனாலும் அவன் பேச்சுக்கு யாரும் செவி சாய்த்ததாகத் தெரியவில்லை. மீண்டும் எல்லோரும் மௌனிகளாகவே இருந்தார்கள். இவர்களிடம் பேசிப் பயனில்லை என அவன் எண்ணினானோ தெரியவில்லை தனது இடம் வர வண்டியிலிருந்து இறங்கிவிட்டான்.

என் மனச்சாட்சி என்னை அரிக்கத்தொடங்கியது. எப்படி நீ கோழையானாய்? ஆபத்து என்று ஒருவன் கத்தும் போது எப்படி மௌனியானாய்? இவற்றையெல்லாம்விட என் காற்சட்டைப் பைக்குள் இருந்த என் கைத்தொலைபேசி புழுவாய் நெளியத் தொடங்கியது நானும் வடிவான சின்ன தொலைபேசி வாங்கவேண்டும் என்று ஒரு அல்ஜீரிய நாட்டு இளைஞனிடம் குறைந்த விலையில் வாங்கியிருந்தேன். இந்தத் தொலைபேசியையும் எனக்கு விற்றவன் யாரிடம் இருந்து களவாடினானோ! பறிகொடுத்தவன் எப்படித் திட்டித் தீர்த்திருப்பான். என் தவறுகள் எனக்குப் புலப்படத் தொடங்கியது. எனக்குள் இருந்த மனிதம் எங்கே? மரித்துக் கொண்டிருக்கிறதா? மனச்சாட்சியின் கேள்விகளுக்கு என்னால் பதில் கொடுக்க முடியவில்லை. அப்போது என் இருக்கைக்கு பின்னால் இருந்துவந்த தமிழ்க்குரல் என் சிந்தனையைக் கலைத்தது. மெதுவாகத் திரும்பிப் பார்த்தேன். 4 இருக்கைகள் கொண்ட இருக்கையில் தாயும் தந்தையும் மூன்று பிள்ளைகளுமாய் இருந்தார்கள் பொதுவாக ஆப்பிரிக்கர்களும், தமிழர்களும்தான் இரயிலுக்குள் உரத்துப் பேசுவதை நான் அவதானித்திருக்கிறேன். அந்த வகையில் இவர்களும் விதிவிலக்கல்ல. உரத்துப் பேசிக்கொண்டு இருந்தார்கள். அவர்களது பேச்சில் இருந்து அவர்கள் கிறிஸ்தவ வேதத்தைப் போதிக்கின்ற போதகரும் அவரது மனைவியும் பிள்ளைகளுமே என்று புரிந்துகொண்டேன். சிறிது நேரம் அவர்களது இன்றைய வழிபாட்டில் நடந்த விடயங்களையும், நாளைய வழிபாட்டில் என்ன செய்ய வேண்டும் என்பதைப் பற்றியும் பேசினார்கள். பேசிக் கொண்டிருக்கும் போது போதகரின் மனைவி போதகரைப் பார்த்து என்ர பிரண்டு சுமதி நோர்வேயில் இருக்கிறா எண்டு உங்களுக்கு சொல்லியிருக்கிறன் தானே. அவள் இப்ப பிரான்ஸ் வந்து நிற்கிறாள். பிரான்சுக்கு வாறதுக்கு முதலில எனக்கு போன் பண்ணிவள். இங்க வந்தா எங்கட வீட்டிலதான் தங்குவன் எண்டு. நான்தான் அடிக்கடி ஜெபவழிபாட்டுக்காக வெளியில போய்விடுவம், பிள்ளைகளும் வீட்டில நிற்காதுகள் உங்களுக்குத் தனிய நிக்க போர் அடிக்கும் உங்க அண்ணர் இங்கதானே இருக்கிறார். அவரட வீட்டில தங்குங்களேன் என்று கழட்டி விட்டிட்டன். இடையில போதகர் சொன்னார் நல்ல வேலை செய்திருக்கிறாய் என்று மனைவியைப் பாராட்டினார். இப்ப என்னவென்டா 20 வருசமாச்சாம் எங்களைப் பார்த்து. அதான் வாற சனிக்கிழமை எங்கட வீட்டுக்கு அவள் குடும்பமாய் வாறாளாம் என்டு போனில சொன்னவள். சனிக்கிழமை சுமதி குடும்பத்தோட வீட்டை வந்தா அவங்களுக்கு எப்படியாவது சமைச்சு சாப்பாடு கொடுக்க வேண்டும். அதோட வீடும் குப்பையாய்ப் போய்விடும். நாங்க என்ன செய்வம் எண்டா நாளைக்கு அவள் இருக்கிற அவளட அண்ணன் வீட்டுக்கே போய்ப்பார்த்திட்டு வந்திட்டா சனிக்கிழமை எங்களுக்கு அலுவல் இருக்கிறதென்டு சொல்லி அவள் வாறதைத் தடுத்திடலாம். உங்களுக்கு நேரம் வருமா என்டு போதகரிடம் கேட்டாள். அவரும் நாளைக்கே போவம் என்று சொல்லிக் கொண்டிருந்தார்.

இவர்களுடைய உரையாடல் எனக்கு சற்று ஆத்திரத்தை கிளறியது. நீண்டகால நட்பை சுமந்து கொண்டு நண்பியைப் பார்க்க ஆவலாக இருக்கின்ற அந்தப் பெண்மணியை கண்டு இவர்களது போலித்தனத்தை வெளியிட வேண்டும் போல இருந்தது. எல்லாவற்றிற்கும் மேலாக இவர்கள் இறையன்பைப் போதிக்கிறவர்கள். இவர்களே பணத்திற்கும், மாமிச ஆசைகளுக்கும் ஆட்பட்டு போலியான வாழ்க்கை வாழ்ந்து கொண்டு எப்படி இவர்களால் இறை ஊழியம் என்ற பெயரால் வாழமுடிகிறதோ தெரியவில்லை. ஏற்கனவே எனக்குள் மனிதம் மரித்துக் கொண்டிருக்கிறதா என்ற கேள்விக்கு, ஒரு நாள் இரயில் பயணத்தில் ஏற்பட்ட இரண்டு சம்பவங்களும் மனிதம் மரிக்கின்றது என்ற முடிவிற்கு சாட்சியம் பகர்வனவாக அமைகிறது.

**எ. ஜோய்**

பெண் என்பவள் யார்? மகளாக, மனைவியாக, தாயாக காலத்திற்கேற்ப வடிவம் எடுப்பவள்தான் பெண். எந்த வடிவத்தை எடுத்தாலும் அதில் தன்னை முழுமையாக்கி ஈடுபடுபவள். இதனால்தான் பின்னுக்கு வருவதை முன்கூட்டியே சிந்திக்கும் ஆற்றல் படைத் தவளாக இருக்கிறாள்.

"பெண் புத்தி பின் புத்தி" என்ற பழமொழியும் அவளுக்கு உரியதாயிற்று. நாட்டுக்கு நாடு, சமூகத் திற்கு சமூகம் ஒரு பெண்ணுக்கு கொடுக்கப்படும் விழுங்கவும் முடியாமல் புலம் பெயர் நாடுகளில் தமிழ்ப்பெண்கள் படும் துன்பம் அதிகமாக இருக்கிறது. ஒரு பெண் திருமணம் பேசப்பட்டு வெளிநாட்டில் சுதந் திரப்பறவையாக, இன்பமாக பறக்கலாம் என்று காலடி எடுத்து வைக்கிறாள். ஆனால் சுதந்திரப் பறவை நான்கு சுவருக்குள் தான் இறக்கை விரிக்கவேண்டும் என்று பின்புதான் உணர்கிறாள். மணப்பந்தல் போட்டு, நண்பர்கள் கேலிசெய்ய, உற்றார் உறவினர் வாழ்த்த, மண்வாசனை கமழ எதிர்பார்த்த திருமணம், நல்ல

# மண்ணும் தமிழ்ப்பெண்ணும்

முக்கியத்துவம் வேறுபடுகிறது. வளர்ந்த நாடுகளைப் பொறுத்தவரை பெண்களுக்கு கொடுக்கப்படும் சுதந்திரம் அதிகம். ஆனால், இலங்கை, இந்தியா போன்ற வளர்ச்சியடைந்துவரும் நாடுகளில் பெண் களை அடிமையாக எண்ணும் மனநிலை மாறவே யில்லை. "பெண் விடுதலை", "பெண் ஆணுக்குச் சமன்" என்று எத்தனை கோசங்கள் போட்டாலும் பெண்ணுக்குள் மென்மை இருப்பதை யாராலும் மறுத்து விட முடியாது. உலகம்பூரா பேசப்படும் இப்பெண் விடுதலைக்கு பலபேர் பல அர்த்தங்களை கொடுத்தா லும், தமிழ்ப்பெண் விடுதலை எந்த வகையில் கையா ளப்படுகிறது என்பது நோக்கத்தக்கது.

ஆண்கள் ஜீன்ஸ் போடுகிறார்கள். நாங்கள் போட்டால் என்ன? ஆண்கள் குடிக்கிறார்கள். நாங்கள் குடித்தாலென்ன? ஆண்கள் எதைச் செய்கிறார்களோ அதை நாம் செய்வதுதான் பெண்விடுதலை என்று நினைக்கிறார்கள். இவ்வாறு நினைத்தால் எமது மூதாதையர் கட்டிக் காப்பாற்றி வந்த தமிழ்ப்பண்பாடு தமிழ்க்கலாச்சாரத்தின் நிலை என்ன? சீரழிய வேண்டி யதுதானா? போராடத்தான் வேண்டும். பெண்களின் உணர்ச்சிகளுக்கு மதிப்புக் கொடுக்காமல் அடிமை யாக்கிப் பார்க்கும் ஆண்களின் மனநிலைக்கு எதிராக போராட வேண்டும். நமது நாட்டில் ஆண்களுக்குச் சமனாக நின்று போர் புரியும் பெண் போராளிகள் தமிழ்ப் பண்பாட்டில் கலாச்சாரத்தில் ஊறியவர்கள்தான்.

புலம்பெயர் நாடுகளை நோக்கினால் அவர்க ளின் பண்பாடு, கலாச்சாரம் எம்மோடு வேறுபட்டுக் காணப்படுகிறது. ஆண்களும், பெண்களும் வேலைக் குப் போகிறார்கள். சிகரட் குடிக்கிறார்கள். வீட்டு வேலை களை இருவரும் பங்கிட்டுக் கொள்கிறார்கள். ஒருவரை ஒருவர் அடக்கி ஆளுவதில்லை. பிள்ளைக ளில் ஆண்பிள்ளைக்கும் பெண்பிள்ளைக்கும் வித்தி யாசமான கட்டுப்பாட்டை வழங்குவதில்லை. சொந் தங்கள் உறவாடுவதற்கு நேரம் ஒதுக்கப்படுகிறது. ஆனால் இந்த உறவும் "ஓடும் புளியம்பழம் போலே" ஒட்டாமலே இருக்கிறது. கணவனுக்கும் மனைவிக்கும் கருத்து வேறுபாடு வந்தால் விவாகரத்துச் செய்யலாம். எத்தனை முறையும் திருமணம் செய்யலாம். பிள்ளை களுக்கு பெற்றோரோடு வாழப் பிடிக்காவிட்டால் பதினெட்டு வயதின்பின் விலகலாம். முதுமைக் காலத் தில் பிள்ளைகளிலிருந்தும் அநாதைகளாகி மிருகங் களை பேச்சுத்துணையாக்கி வாழ்க்கை முடிகிறது. நாகரிகம் என்ற போர்வையில் அவர்களுக்கு அது பழக்கப்பட்டதொன்றாகிவிட்டது.

இந்த வாழ்க்கை தமிழ் மக்களுக்கு பொருந் துமா? பொருந்தாததால்தான் மெல்லவும் முடியாமல், நேரம் பார்க்காமல் கல்யாண மண்டபத்தில் இடம் கிடைக்குமா என்று பார்த்து அவசரத்திலும் களைப்பி லும் நடைபெறும் கல்யாணம் அவள் வாழ்க்கையில் அடியெடுத்து வைத்த முதல் விரக்தி.

சில பெண்கள் வேலைக்குப் போகின்றனர். சில பெண்கள், ஆண்கள் வேலைக்குப் போனவுடன் தனித்து விடப்படுகின்றனர். தனிமை ஒரு கொடுமை. தனிமை நீங்க பிள்ளை பெற்றுக்கொள்ள நினைக்கின்றனர் சிலர். ஆனால் பிள்ளைகூட அவளுக்கு சுமையாகி விடுகிறது. பிரசவகாலத்தில் கூட அவள் தனித்து விடப்படுகிறாள். அருகில் உறவுகளில்லாத நிலையில் பயந்து பயந்து ஒருவழியாக சுமையை இறக்கினாலும் உதவிகளற்ற நிலையில் வயிற்றுப்புண்ணோடு அவள் படும் வேதனை எண்ணிலடங்கா. கணவனும் வேலைக் குப் போகாமல் நிற்க முடியா நிலை.


விரும்பியோ விரும்பாமலோ அவளது வாழ்க்கை பிள்ளை, புருஷன், வீடு என்ற வட்டத்திற்குள் அடக்கப் பட்டுவிடுகிறது. வேலைக்குப் போகும் பெண்ணென்றால் இயந்திரமாகி விடுகிறாள். வீடும், வேலையும் அவளை நசுக்கிவிடுகிறது. புலம்பெயர் மண்ணைப் பொறுத்த வரை கணவனுக்கு மனைவி துணை. மனைவிக்கு கணவன் துணை. வீட்டு வேலைகளில் கணவன் மனைவி க்கு ஒத்தாசை பண்ணினாலும் ஒரு தமிழ்க் கணவனிடம் முழுமையான ஒத்தாசையை எதிர்பார்க்க முடியாது. சாகும்வரை அவள் சுமைதாங்கியாகவே இருக்கிறாள். பாடசாலை செல்லும் இளம் பருவ பெண்களுக்கும், பெற்றோருக்கும் இடையில் ஏற்படும் கருத்து முரண்பாடு களையும் குறிப்பிடவேண்டியது அவசியமாகும். ஒரு பிள்ளை வீட்டில் இருக்கும் நேரத்தைவிட பாடசாலை யில் இருக்கும் நேரம் அதிகம். அப்பிள்ளைக்கு பாடசா லையில் கிடைக்கும் அனுபவரீதியான பண்பாட்டுக் கலாச்சாரமும், தாயால் விதிக்கப்படும் அனுபவமற்ற கலாச்சாரமும் வேறுபட்டுத் தெரிவதால் தாய்க்கும் மகளுக்குமிடையில் கருத்து முரண்பாடுகள் ஏற்படுகின் றன. பிள்ளையின் எதிர்காலம் எப்படியிருக்குமோ என்ற குழப்பத்திலேயே நிம்மதியை தொலைக்க வேண்டிய நிலைக்குத் தள்ளப்படுகிறாள் தாயாகிய பெண்.

ஒரு பெண்ணின் வாழ்வே போராட்டகளம்தான். வாழ்வதற்காக எதிர்நீச்சல் போடவேண்டியவளாயிருக் கிறாள். தமிழ்ப்பண்பாட்டை மறந்த, கலாச்சார த்தை மறந்த பெண்விடுதலையை விடுதலையாக ஏற்க முடியாது. இதனாற்தான் புலம்பெயர் மண்ணில் தமிழ்ப் பெண்களாக வாழ்வதற்காக தம்மையே உருக்கிக் கொண்டிருக்கிறார்கள், நம்நாட்டுப் பெண்கள்.

**- திருமதி. மெரிசியா சீலன் -**

## மண்டைதீவுக் கடலில் விதையாகிப் போ
## திருமதி. அந்தோனியாப்பிள்ளை பிலிப் அவர்களி
## மாணவர் சங்கம் நடாத்திய









29.09.2003 ஓபர்வில்லியர்ஸ் இல் அமைந்துள்ள சென். மார்த்தாள் தேவாலய மண்டபத்தில் குறிப்பிட்ட நேரத்தின்படி சரியாக பிற்பகல் 1.00 மணிக்கு மண்டபம் நிறைந்த மக்களுடன் கலைக் குழுவினர் மக்கள விளக்கேற்றி போட்டியை ஆரம்பித்து வைத்தார்கள். திருமதி மெரிசியா சீலன் அவர்கள் நிகழ்ச்சிகளை அழகாகத் தொகுத்து வழங்கினார். தொடர்ந்து 31 மீனவர்களுக்கு அமைதி வணக்கம் செலுத்தி கவிதை அஞ்சலியுடன் போட்டிகள் ஆரம்பமாகியது. போட்டிகள் யாவும் 4 பிரிவுகளாக நடாத்தப்பட்டது. பரத நாட்டியம், பேச்சுத்திறன், தனிநடிப்பு, பாட்டுத்திறன், மேலைத்தேய நடனம், ஓவியம், சிறுகதை, கவிதை ஆகிய போட்டிகள் மிக சிறப்பாக நடைபெற்றது. இப்போட்டிகளில் இம்முறை அதிகமானோர் ஆர்வத்துடன் கலந்து கொண்டார்கள். பெற்றோர்கள் மிகமிக திறமையாக ஊக்கம் கொடுத்து தங்கள் பிள்ளைகளின் திறமைகளை வெளிக் கொணர்ந்தமை மிகவும் பாராட்டப்பட வேண்டியதும் பெருமைப்பட வேண்டிய விடயமுமாகும். இந்தவகையில் பல சிரமங்களுக்கு மத்தியிலும் தங்கள் பொறுப்புக்களை கடமையுணர்வுடன் செயலாற்றி வருகின்ற பழைய மாணவர் சங்கத்தினர் மிகவும் பாராட்டப்பட வேண்டியவர்கள்.

இப்போட்டிக்கு நடுவர்களாக திரு.ஜே.சேகர், திருமதி. சிவபூபதி நந்தகுமார், திரு. திருமதி. தேவா மடோனா, திருமதி. ஜெனற் ஜோய், திருமதி. நொயிலின் அன்ரன், திருமதி. றெஜிடியண்சி, திருமதி. ரிச்சேட் ஈஸ்வரி, செல்வி. சொபியா கெலமன் ஆகியோர் கலந்து கொண்டார்கள். போட்டிகளின் இறுதியில் சங்கத்தலைவர் குருசுமுத்து பீலிக்ஸ் அவர்கள் எமது சமூக வளர்ச்சிக்கு இங்குள்ள தமது கடமைகள் பற்றி உரையாற்றினார். தொடர்ந்து பேசிய கலைக்குழுத் தலைவர் எமிலியானுஸ் ஜோய் போட்டிகள் ஏன் நடத்தப்படுகின்றன என்பது பற்றியும் அலைஓசை சஞ்சிகை பற்றியும் விளக்கவுரை வழங்கினார். தொடந்து அலை ஓசை 3வது இதழ் வெளியிடப்பட்டது. இம்முறையும் முதல் பரிசுபெற்ற 10 வயதுடைய செல்வன் நோமன் ஆனந்தனின் ஓவியமே அட்டைப்படமாக வெளிவந்துள்ளது. இச்சிறுவனின் திறமை அனைவரின் பாராட்டையும் பெற்றிருந்தது.

போட்டியின் இறுதியில் பரிசளிப்பு வைபவம் இடம்பெற்றது. திருமதி.ஈஸ்வரி ரிச்சேட் அவர்கள் பரிசில்களை வழங்கினார். போட்டிகளில் முதல் மூன்று இடத்தைப் பெற்றவர்களுக்கு விசேட பரிசில்கள் வழங்கப்பட்டதுடன் முதல் பரிசில்கள் பெற்றவர்களுக்கு பரிசில்களுடன் குருநகர் மண்ணின் மைந்தனும் சென்.ஜேம்ஸ் பழைய மாணவனுமாகிய குருநகர் கலையார்வன் (குருசுமுத்து இராயப்பு) அவர்கள் எழுதிய கணிப்பொறி செயல்முறை நூல் பாகம் 1 நூலும் சிறப்புப் பரிசாக வழங்கப்பட்டது. குருநகர் மக்களின் கல்வி முன்னேற்றத்தைக் கருத்திற் கொண்டு இயங்கும் பழையமாணவர் சங்கத்தின் முயற்சிகள் யாவும் பாராட்டப்பட வேண்டியவையே. 8.30 மணிக்கு நிகழ்ச்சிகள் யாவும் நிறைவு பெற்றது.







## ன 31 மீனவர்களின் ஞாபகார்த்தமாக
## ின் ஆதரவில் குருநகர் சென். ஜேம்ஸ் பழைய
## வேது கலைத்திறன் போட்டி

### பேச்சுத்திறன்

**5வயது முதல் 8 வயது வரை**
1ம் இடம் : எட்வேட் வேர்ஜினியா
2ம் இடம் : சந்திரன் பெனிஸ்ரன்
3ம் இடம் : சந்திரன் கிளின்ஸ்மன்

**9 வயது முதல் 12 வயது வரை**
1ம் இடம் : சாம்சன் ஷைனி சாமினி
2ம் இடம் : வியூ எமர்லினா
3ம் இடம் : சாம்சன் சுலோஜனா

**13 வயது முதல் 16 வயது வரை**
1ம் இடம் : தனுஷா சாள்ஸ்
2ம் இடம் : இஸபெல் குமார்

### தனிநடிப்பு

**5வயது முதல் 8 வயது வரை**
1ம் இடம் : டிவின் தேவா
2ம் இடம் : டிலிசியா வியூ
3ம் இடம் : நிஷாந்தி மனோகரன்

**9 வயது முதல் 12 வயது வரை**
1ம் இடம் : எமர்லினா வியூ
2ம் இடம் : நோமன் ஆனந்தன்
3ம் இடம் : மனோகரன் மனோஷாந்

**13 வயது முதல் 16 வயது வரை**
1ம் இடம் : தனுஜா சாள்ஸ்

**16 வயதிற்கு மேற்பட்டோர்**
1ம் இடம் : பொபிதா ஞானேந்திரன்

### பாட்டுத்திறன்

**5வயது முதல் 8 வயது வரை**
1ம் இடம் : ஜனனி அன்ரன்
2ம் இடம் : தேவா டிவின்
3ம் இடம் : எட்வேட் வேர்ஜினியா

**9 வயது முதல் 12 வயது வரை**
1ம் இடம் : சன்றின் தேவா
2ம் இடம் : எமர்லினா வியூ
3ம் இடம் : குட்டியன் கிளவுடியா

**13 வயது முதல் 16 வயது வரை**
1ம் இடம் : தனுஜா சாள்ஸ்

**16 வயதிற்கு மேற்பட்டோர்**
1ம் இடம் : அ. குமார்
2ம் இடம் : யசோதா எட்வேட்
3ம் இடம் : ஞானேந்திரன் பொபிதா

### மேலைத்தேய நடனம்

**5 வயது முதல் 10 வயது வரை**
1ம் இடம் : எமர்லினா வியூ
2ம் இடம் : சாள்ஸ் ஒபெக்சன்
3ம் இடம் : தேவா டிவின்

**11 வயது முதல் 15 வயது வரை**
1ம் இடம் : தனுஜா சாள்ஸ்
2ம் இடம் : றஸ்கின் றொஜே
3ம் இடம் : வினி ஆனந்தன்

**15 வயதிற்கு மேற்பட்டோர்**
1ம் இடம் : ஷைனி ஏஞ்சல் றிச்சேட்
2ம் இடம் : பொபிதா ஞானேந்திரன்

### ஓவியம்

**5வயது முதல் 8 வயது வரை**
1ம் இடம் : மனோகரன் நிஷாந்தி
2ம் இடம் : கமில்ரன் மிதுன்
3ம் இடம் : கமில்ரன் இவ்றின்

**9 வயது முதல் 12 வயது வரை**
1ம் இடம் : ரவிராஜ் கிளவுடியா
2ம் இடம் : அன்ரன் அரணியா
3ம் இடம் : வியூ எமர்லினா

**13 வயது முதல் 16 வயது வரை**
1ம் இடம் : இஸபெல் குமார்
2ம் இடம் : ருத்மன் தார்சியஸ்
3ம் இடம் : செபஸ்ரியாம்பிள்ளை தெருனி

**16 வயதிற்கு மேற்பட்டோர்**
1ம் இடம் : திருமதி. டியான்சி றெஜி
2ம் இடம் : கி. திலக்குமார்

### பரதநாட்டியம்

**5 வயது முதல் 10 வயது வரை**
1ம் இடம் : வியூ எமர்லினா
2ம் இடம் : தேவா டிவின்
3ம் இடம் : வியூ டிலிசியா

**11 வயது முதல் 15 வயது வரை**
1ம் இடம் : தனுஜா சாள்ஸ்
2ம் இடம் : சன்றின் தேவா

**16 வயதிற்கு மேற்பட்டோர்**
1ம் இடம் : றிச்சேட் ஷைனி ஏஞ்சல்
2ம் இடம் : ஞானேந்திரன் பொபிதா

### சிறுகதை

1ம் இடம் : ஒலின்ரா டக்ளஸ்
2ம் இடம் : சிறீ றேனு
3ம் இடம் : மெரிசியா சீலன்

### கவிதை

1ம் இடம் : சிறீ றேனு











# ஒரு கணக்கு

- வாசுதேவன்

மீண்டுமொருமுறை பூமி சூரியனை வலம் வந்து முடிக்கப்போகின்றது.

பிரபஞ்சத்தில் வேறெங்கினும் உயிர்கள் வாழ்கின்றனவா என்ற ஆய்வுகள் இன்னமும் விடாப்பிடியாகவும் மூர்க்கமாகவும் தொடர்ந்த வண்ணமாகவே உள்ளது. சிந்திக்கத் தெரிந்த அல்லது தண்டிக்கப்பட்ட உயிரினமாகிய மனிதர்கள் (இது மனிதர்களின் வெறும் நம்பிக்கையாகவும் இருக்கலாம்) பூமிக்கிரகத்தின் முடிவைத் தயார் செய்து கொண்டிருக்கிறார்களோ என்னுமளவிற்கு மனிதக் காரியங்கள் எல்லாம் திசையறுந்து தொடர்ந்துகொண்டிருக்கின்றன. உயிரினங்கள் உள்ளதாகக் கூறப்படும் இந்த கிரகத்தில் எல்லாமே அற்புதமாகவுள்ளன. ஆழமாகச் சிந்தித்துப் பார்த்தால் ஒவ்வொரு கணமும் ஆச்சரியம் கொள்ளக்கூடிய அளவுகடந்த ஆச்சரியங்களைத் தேக்கி வைத்திருக்கும் இப்பூமிப்பந்தில் மட்டுமே உயிரினங்கள் இருக்கின்றன என்பது தற்போதைய அறிவுக்கெட்டிய விடயம்.

ஆனால், இந்த உயிரினங்களெல்லாவற்றிலும் அபிவிருத்தியடைந்ததாகவும், அறிவுபூர்வமானதாகவும் கருதப்படும் மனித இனம் மட்டும் மற்றைய உயிரினங்களுக்கும் தனக்கும் மிகப்பெரிய அச்சுறுத்தலாகிவிட்டது. மனித இனம் அதன் அறிவுத்திறனால் தனது அழிவைத் தயார் படுத்திக்கொண்டிருப்பது தெளிவுறத் தெரிகின்றது.

"பிரக்ஞையற்ற அறிவு ஆத்மாவின் அழிவு" என்ற கூற்று என்றுமில்லாதவாறு இன்று உறுதி செய்யப்படுகின்றது.

கோடானுகோடி பணத்தை முதலிட்டு மேலும் மேலும் அழிவையுண்டாக்கக் கூடிய ஆயுதத்தொழில் நுட்பங்களை விரிவுபடுத்தி வியாபாரப்படுத்துவதற்காக புதிது புதிதாக யுத்தங்களைத் தூண்டிவிடும் நாசகாரச் சதி வேலைகளில் பல "முன்னேறிய" நாடுகளின் ஆயதக் கம்பனிகள் கண்ணும் கருத்துமாய் ஈடுபட்டுக்கொண்டிருக்கின்றன.

அழிவிலிருந்து மனித இனத்தை இனிக் காப்பாற்ற முடியாதெனும் இறுதியான தீர்மானத்தை எடுத்துவிட்டவர்களின் எண்ணிக்கை நாளுக்கு நாள் உயர்ந்து கொண்டே செல்கிறது. இந்த உலகத்தில் எதற்காகக் குழந்தைகளைப் பெறுகிறோம் என அச்சம் கொள்வோர் அதிகமாகின்றனர்.

முன்னரெல்லாம் கோட்பாடுகளின் பெயரால் அழிவுகளும், அளவுகணக்கற்ற உயிர்ச்சேதங்களும் நடந்தேறின. கடந்த நூற்றாண்டில் ஸ்ராலினிஸமென்றும், நாஸிஸமென்றும் வேறு பல இஸங்களினால் பல்லாயிரக் கணக்கான மனிதர்கள் கொன்றொழிக்கப்பட்டார்கள்.

இந்நூற்றாண்டும் பல போர்களுடன்தான் பிறந்திருக்கிறது. போர்கள் இல்லாத உலகை ஒருபோதும் உருவாக்க முடியாது என்று கருதுபவர்களும் இருக்கத்தான் செய்கிறார்கள்.

மதவெறிகளும், முனைப்புகளும் அதிகமாகி யாரையும் யாரும் சுட்டிக்காட்டத் தகுதியற்ற வகையில் எல்லா மதங்களும் ஆத்மீகத்தைக் கைவிட்டுவிட்டு குருட்டு வெறியைக் கடைப்பிடிக்கத் தொடங்கிவிட்டன. மதங்களில் எவையுமே மனிதர்களைத் தகுந்த வழியில் வழிநடத்தும் முயற்சியில் வெற்றிகாணவில்லை. அன்பையும் கருணையையும் பரப்புவதாகக் கருதப்பட்ட எல்லா மதங்களும் இன்று அல்லற்படும் அப்பாவிகளின் அடைக்கல இடமாக மாற, அவ்விடமெல்லாம் அரசியல் வாதிகளாலும், எரிநெருப்பில் பிடுங்கக் கூடியவற்றைப் பிடுங்குபவர்களாலும் ஆக்கிரமிக்கப்பட்டு விட்டது.

அனைத்து ஒழுக்கங்களும், இரக்கங்களும் "பணத்திற்காய்ப் பணம்" என்னும் ஒரேயொரு கோட்பாட்டினால் இன்று முழுமையாக விழுங்கி ஏப்பம் விடப்பட்டு விட்டன. "இரக்கங்களினது" காவலர்கள் இன்று அதை ஏப்பம் விடுபவர்களின் எடுப்பார் கைப்பிள்ளைகள் ஆகிவிட்டனர்.

அமெரிக்க- ஐரோப்பிய ஆதிக்கவெறி பூமியெங்கும் தலைவிரித்தாடுகிறது. விருப்பிற்கேற்ப எங்குவேண்டுமானாலும் இரைதேடி உண்பேன் என இவ்வேகாதிபத்தியங்கள் கட்டியம் கூறி காரியத்திலும் செயற்படுகின்றன. உலகக் குடிமக்கள் அனைவரையும் முட்டாள்களாக்குவதற்காகவே அவர்கள் வைத்திருக்கும் ஊடகங்கள் இடைவிடாது தொழிற்பட்டுக் கொண்டிருக்கின்றன..

பல்லாயிரம் வருடங்களாக, பல நூற்றாண்டுகளாக மனிதர்களில் மகிமையானவர்கள், பொதுநலப் போராளிகள் ஆற்றிவரும் அறிவியல் முயற்சிகளில் மனிதகுலம் பெற்ற பயன் சில உண்டுதானெனினும், இத்தனை சிந்தனைத் திறன்களின் ஆற்றல்கள், தத்துவ-ஆத்மீகக் கண்டடைவுகள் இன்னமும் சரியான முறையில் வாழ்க்கையில் நடைமுறைப் படுத்தப்படவில்லை என்பது மட்டும் தான் தெள்ளத் தெளிவாக அடிக்கோடிட்டுக் காட்டிக் கொள்ளக்கூடிய ஒன்றாக உள்ளது.

அவ்வாறெனில், மனிதகுலம் ஒட்டுமொத்தமாக பிரக்ஞையற்ற வாழ்க்கையொன்றை வாழ்ந்து கொண்டிருக்கிறதா எனும் கேள்வி இயல்பாய் மேலெழுவதை எவ்வாறு தவிர்க்க முடியாதோ, அவ்வாறே அக்கேள்விக்கு அதுதான் உண்மையானது எனப் பதில் அளிப்பதும் தவிர்க்க முடியாததேயாகும்.

"நாகரீகம் அடைந்த உலகம்" மிகுதி உலகின் மீது காட்டும் அநாகரீக ஆதிக்கவெறிக்கு ஜனநாயகம் என்றும் சுதந்திரத்திற்கான போராட்டம் என்றும் பெயர் சூட்டி "சிலுவைப் போராட்டம்" ஆரம்பித்திருக்கும் இன்றைய நாட்களில், ஐ.நா சபையென்னும் முற்றுமுழுதாக ஜனநாயகத்தை மறுக்கும் ஏகாதிபத்திய வெறியர்களின் கைப்

பொம்மை நிறுவனம் நவீன உலகின் அனைத்து அநீதிகளுக்கும் உடந்தையாக இருக்கும் இன்றைய நாட்களில் , உலக மயமாக்கல் என்னும் பெயரில் மூன்றாம் உலக மண்டல நாடுகளின் மூளைவளங்களும், மூலவளங் களும், உடலுழைப்பும் சூறையாடப்பட்டு என்றுமில்லாத வாறு உலகில் அடிமைகளின் எண்ணிக்கை அதிகரித்து விட்ட இன்றைய நாட்களில், நாளைய நாட்களைப்பற்றிய நம்பிக்கைகள் எவ்வாறு தோற்றமுறும் எனும் கேள்வி கேள்விகளுக்குளெல்லாம் முதன்மையானதாய் உருவெடு த்து முன்னின்று பதிலுக்காய் காத்திருக்கிறது.

என்ன கூறமுடியும் ?

சிந்தனையாளர்கள் சிந்தித்துச் சிந்தித்து அலுத்து விட்டார்கள். அவர்களின் தரவுகள், தர்க்கங்கள், தீர்மான ங்கள் எல்லாம் போதியளவு வலுவான மனிதகுல விடுதலைக்கான பாதைகளைப் போடும் பக்குவம் கொண்ட னவையாக உள்ளன. ஆனால், இவையெவையும் போதிய ளவு பரப்பப்படவில்லை, போதியளவு நடைமுறைப்படுத்தப் படவில்லை.

இன்று உலகெங்கும் மதப்பிரச்சாரம் செய்யும் நிறுவனங்களின் எண்ணிக்கையில் நூறில் ஒரு பங்கு எண்ணிக்கையில் கூட அறிவைப்புகட்டும் நிறுவனங்கள் இல்லை. ஆத்மீக விடுதலைக்குச் செய்யப்படும் பிரச்சாரங் களில் அனேகமானவை சமுக-அரசியல் விடுதலைக்கான முட்டுக்கட்டைகளாகவே பயனளிக்கின்றன.

உலகின் மூலை முடுக்குகளெங்கும், கண்டம் கண்டமாக, நாடுநாடாக, நகரம் நகரமாக, கிராமம் கிராமமாக, வீதி வீதியாக அறிவைப் பரப்பும் கைங்கரியம் ஆற்றிமுடிக்கப்படல் வேண்டும்.

அறிவைத் தம் பிரத்தியேக உரிமையாகக் கருதி விட்ட ஒரு சில அறிவியற் பரோபகாரிகளின் சுயநலன் களுக்குள், ஒரு சில அரசியல்வாதிகளின் முரட்டுப் பிடி வாதங்களுக்குள் நசுங்கும் அப்பாவிகளுக்குக் கிடைக்கக் கூடிய அறுதியான விடுதலை அவர்களின் அறிவியல் விடுதலைதான் என்பதில் சந்சேகம் துளியளவும் இல்லை.

இருநூறு ஆண்டுகளுக்கு மேலாகிவிட்ட மனித உரிமைப்பிரகடனங்களின் அறுதியான நடைமுறைப்படுத் தலில்தான் உலகக் குடிமக்கள் ஒவ்வொருவரினதும் உரிமை உறுதியாகப் பாதுகாக்கப்படும் என்பதே இன்றைய காலகட்டத்தில் தெளிவுபெற்ற விடயமாகும்.

ஆனால், மனித உரிமைகள் என்றும் ஜனநாயகம் என்றும் உலகிற்குப் பாடம் கற்பிக்க விளையும் போலியான நாகரீக உலகை சரியான முறையில் இனங்காண்பதற்குமான அடிப்படைக் கல்வியை, அறிவைப் பெறாத யாரும் வலுவற்றோர்க்கொதிரான சர்வதேசச் சதியை முறியடிக்க முடியாத நிலையிலுள்ளவர்கள்தாம்.

மதங்களும், ஒழுக்கங்களும், அவ்வப்போ ஆங் காங்கே தோன்றிய கோட்பாட்டாளர்களும் தோற்றுவிட்ட விடயத்தில், மனித குலத்தை ஒட்டுமொத்தமாக அழிவிலி ருந்து காப்பாற்றும் முன்னெடுப்புகளில் இன்றைய மாற்றீட்டு வழியாக இன்னமும் மிகுதியிருப்பது மனித உரிமைகளின் உறுதியான நடைமுறைப்படுத்தல்தான். உலகின் எங்காவது ஒரு மூலையில் யாராவது ஒரு மனிதரின் உரிமைகள் மீறப்பட்டால் அந்த மீறல் ஒட்டு மொத்தமான மனித குலத்திற்கு இழைத்த கொடூரமாக கருதப்பட்டு அதற்கு எதிரான நடவடிக்கைகளும் நட்டஈடுகளும் வழங்கப்படும் நிலையில்தான் நீதி நிறுவப்பட்டு விட்டதாகக் கூறமுடியும்.

இன்றைய உலகு செல்வம் கொழிக்கும் உலகாக மாறிவிட்டது. உற்பத்திச் சாதனங்களும், தொழில்நுட்ப முன்னேற்றங்களும் முழுமையான மனித குலத்தையும் செழிப்பாக வாழவைப்பதற்குப் போதுமானவை. ஆனால், பல்தேசியக் கம்பனிகளும் நிதிநிறுவனங்களும் தம்மையும் மீறிய ஆபத்திற்குள் மனித குலம் முழுவதையும் வழிநடத்திக் கொண்டிருக்கிறார்கள்.

நேற்றும் இன்றும் மூன்றாம் உலக நாடுகளில் சர்வாதிகாரிகளையும், நாசகாரிகளையும், கைப்பொம்மை களையும் உருவாக்கி மனித குலத்தின் ஐந்தில் நான்கு பங்கைப் பகடைக்காயாக உருட்டி விளையாடிக் கொண்டிருக்கும் இந்த "ஐந்திலொரு பங்கு" க்கு மதமில்லை, ஒழுக்கமில்லை, இரக்கமில்லை, மனச்சாட்சியில்லை, இவர்களிடம் எதுவுமேயில்லை. இவையெல்லாம் அன்று தொட்டு இன்றுவரை இவர்களின் வஞ்சக ஆயுதங்களாகவே பாவிக்கப்பட்டிருக்கின்றன.

நேற்றையதும், இன்றையதுமான அனைத்து மனித உரிமை மீறல்களும் தண்டிக்கபட்வேண்டிவை. நேற்றைய தும் இன்றையதுமான ஒட்டுமொத்தமான அனைத்துச் சர்வாதிகாரிகளும் நீதியின் முன்னே நிறுத்தப்பட வேண்டியவர்கள்.

இன்றைய ஆட்சியாளர்கள் பலர் மட்டுமல்ல, ஐ.நா நிறுவனம் கூட மனித உரிமைமீறல்களுக்காகத் தண்டிக் கப்பட வேண்டியதுதான். யார் எவர் என இல்லாது, அவரின் பலம் பலவீனம் எவையெனச் சிந்திக்காது, ஒவ்வொரு மனித உரிமை மீறல்களும் சர்வதேச வெகுஜன நீதியின் முன் நிறுத்தப்பட்டுத் தண்டனை தீர்மானிக்கப்பட வேண்டும். எந்தவொரு ஆட்சியாளர்களும், தனிமனி தர்களும் மனித உரிமைகளைப் புனிதமானவைகளாகப் பேணாத பட்சத்தில் அவர்கள் குற்றவாளிகளாகவும் அநாகரீகமானவர்களாகவும் கணிக்கப்படல் வேண்டும்.

இந்த அடிப்படையில் மட்டுமே உண்மையான நாளைய நாகரீக உலகத்தைப் படைக்கலாம் . இந்த அடிப்படையில் மட்டுமே நாளை மனிதகுலம் விடுவிக் கப்படுவதற்கான போராட்டத்தின் அடிக்கற்களை நாட்ட லாம். இந்த அடிப்படையில் மட்டுமே மனித குலம் தன்னை அழிவிலிருந்து காப்பாற்றலாம்.

அனைத்துத் தோல்விகளுக்கும் பின்னர், இந்த அடிப்படை மட்டுமே நாளைய எதிர்பார்ப்பாக முன்னெடுக்கப்படவேண்டும்.

# கவிதைச்சரம்

## உயர்ந்த பொருட்கள்

அழகான பொருட்களை – ஆண்டவன்
உயரத்தில் வைத்துவிட்டான்
வண்ணத்துப் பூச்சிகளின் – வர்ண ஊர்வலம்
வானத்தில் உரு வசந்த விழா

உயரே பார்க்கிறேன்
ஒளி வீசும் சந்திரன்
ஓடித்திரியும் முகில் கூட்டம்
மின்னிச் சிமிட்டும் நட்சத்திரங்கள்

இரவுக்குள் வானத்தில் ஒரு நாடகமேடை
நீலத்திரையில் தாரகைகளின் – நாட்டிய
அரங்கேற்றம்
வீதிகளிலே மின் விளக்குகளின்
ஒளிவட்டம்

விடிந்தால் வைகறைப் பொழுதில்
வாழ்த்துச் சொல்லும் சுந்தரச் சூரியன்
சிவப்பாய்ச் செம்பழமாய் தொட்டுப்
பார்க்கமுடியா தூரத்தில் நிற்கின்றான்

பாசப்பறவைகளின் நேசச் சில்மிசங்கள்
வேசமில்லா வெள்ளித்திரை காட்சிகள்
இடிகூட இடிக்கின்ற போது
எங்கோ கேட்கும் மேள ஒலிதான் – இங்கு
படிகின்ற போதுதான் பாதிப்புக்கள் அதிகம்

இத்தனையும் உயர வைத்துவிட்டு
மனிதனை மட்டும் மண்ணில் வைத்த
காரணம் எதுவோ?
ஓ இறைவனே
தாழ்ந்த மனம் கொண்டதால் தான்
மனிதனைத் தரையில் வைத்துவிட்டாயோ?

- சிறிறேனு

## மீண்டும் எழுந்திருக்கையில்

எனது மயிர் பொசுங்கிவிட்டது
எனது தோல் கருகி விட்டது
எனது காதுச் சோனைகள் தெறித்து விட்டன
இந்த ரணங்களோடு தான் மீண்டும் எழுந்திருக்கின்றேன்
இந்த ஊனங்களின் தழும்புகளுடன். தான்
நான் இனி வாழ வேண்டும்

எனது மன வெளியோ வெந்த
வனம் போல் ஆகிவிட்டது
தீப்பிடித்துக் கருகிய புற்கற்றைகள்
இங்கொன்று அங்கொன்றாய் தென்படுகிறது
இடையே கரிக்கட்டையும் சாம்பலும் கலந்த மண்
அடி கருகிய புற்கற்றைகளிலிருந்து
இரண்டொரு பசும் தளிர்கள்
சின்னச் சின்ன பச்சை பசல்கள் தெரிகிறதா?

- செறின் றொபின்சன்

## உறக்கங்கள் தீரட்டும்

கூவாத செங்கொண்டை
சேவல்களுக்காய்
பொழுது புலர்ந்திட
மறப்பதில்லை

போர்வைக்குள் புகுந்து கொண்ட
என் இனமே
போர்வையை விலத்தி
ஒட்சிசனை உள்ளிழுக்க
உங்கள் சன்னல்களை
திறந்து வையுங்கள்

கனத்த இருளில்
மறைக்கப்பட்ட முகங்கள்
வெளிச்சம் கண்டு நாணுமுன்
போர்வையை விலத்தி
வெளியே வாருங்கள் – மடமையில்
நீங்கள் உறங்கியது போதும்

பண்ணான பண்பாட்டை
பாடையிலே ஏற்றுவது போல்
பகட்டாய் படபடக்கும்
சில் சிலிப்பை விட்டு விட்டு
பண்ணான பண்பாட்டில்
ஓங்குகின்ற ஓரினமாய்
ஒன்றிணைவோம் வாருங்கள்

உதட்டிற்கு சாயம்
அழகென்பதற்காய்
உள்ளிருக்கும் நாக்கை
அறுத்திடத் துணிவதுண்டோ

அன்னை தந்த தமிழ்
பிள்ளைக்கு வழங்குவதில்
தயக்கமென்ன தமிழினமே
மாயை விலகி தெளிந்திடு
அயல் நாட்டில் வசிக்கும்
உன் சோதரியின் மகளுடன்
பேசுவதற்கேனும் இணைமொழியாய்
தமிழ் மொழி வேணும்.

- ஜெயந்தி ஜீவா (சுவிஸ்)



# பார்போற்றும் பரதக்கலை

சுமார் 2000 ஆண்டுகட்கும் மேலாகப் பாரெங்கும் பரவிக்கிடக்கும் இப்பழம்பெரும்கலைக்கு பரதர் என்னும் முனிவர் இலக்கணம் வகுத்தாலும் இக்கலையின் பிறப்பிடம் பாரதநாடு என்பதனாலும் பாவம், ராகம், தாளம் ஆகியவற்றை ஒருங்கே அமையப் பெற்றதாலும் இதற்கு பரதக்கலை என்று பெயர் வழங்கலாயிற்று என்ற பல நாட்டிய அறிஞர்கள் கூறியுள்ளனர். அறம், பொருள், இன்பம், வீடு ஆகிய நான்கு புருஷார்த்தங்களையும் அளிக்கவல்லது என வேதகாலத்திலும் பிற்காலத்தில் பேரரசர்களாலும் உன்னதமாகப் போற்றப்பட்டது நம் பரதக்கலை.

இக்கலையை முற்காலத்தில் கூத்து என்றும் பின்பு சதிர் என்றும் அழைத்து வந்தனர். கடந்த 40 ஆண்டுகளாகத்தான் இக்கலைக்கு பரதக்கலை என்று பெயர் வழங்கலாயிற்று. இக்கலை இரண்டு பக்கங்களைக் கொண்ட ஓர் நாணயமாகும். ஒரு பக்கம் சாத்திரம் (சமயவரலாறு) மறுபக்கம் சரித்திரம் (உலக வரலாறு) இதனை நினைத்தவுடன் எல்லோராலும் ஆடிவிட முடியாது. இதற்கு இலக்கணம், செய்முறை, சரித்திரம் என்பன முக்கியமானவையாகும் உள்ளத்தில் ஏற்படும் உணர்சிகளை வெளிப்படுத்துதற்குரிய உடலின் உறுப்புக்களின் இயக்கங்களை உடையது இக்கலை.

கைவழி நயனம் செல்ல<br>
கண்வழி மனம் செல்ல<br>
மனம் வழி உணர்ச்சி செல்ல<br>
அதனின்று சுவை பிறக்கும் எனப் பரத முனிவர் அவரினால் எழுதப் பெற்ற நாட்டிய சாஸ்திரம் என்னும் நூலில் இக்கலைக்கு இலக்கணம் கூறியுள்ளார்.

இந்த நடனமுறைத் தெளிவும் நளினமும் முன்னேற்றமடைந்த ஒரு கலை வடிவமாகும். இதற்கென்றே அமைக்கப் பெற்ற இசை உருப்படிகள் மற்றும் அபிநயத்திலும் தாளத்திலும் உள்ள கலை நுணுக்கங்கள் ஆகியவற்றின் சேர்க்கையினால் இது ஓர் தனித்தன்மை வாய்ந்த கலையாகத் திகழ்கிறது. கதையையும், கருத்துக்களையும், கதையில் வரும் சூழ்நிலைகளையும் பாத்திரங்களின் குணச்சித்திரங்களையும் ரசிகர்கள் புரிந்துகொண்டு மகிழுமாறு செய்வதே இக்கலையின் குறிக்கோளாகும். இக்குறிக்கோளை நிறைவேற்றுவதற்கு அபிநயம் முக்கியமான தொன்றாகும்.

கருத்துக்களையும், உணர்ச்சிகளையும் வெளிப்படுத்தும் வடிவம்தான் அபிநயம். இது நான்கு பிரிவுகளைக் கொண்டுள்ளது. உள்ளத்தின் உணர்ச்சிகளை உடலின் உறுப்புக்களால் வெளிப்படுத்துவது "ஆங்கீக அபிநயம்". சொற்களால் உணர்த்துவது "வாசிக அபிநயம்", உடை, ஒப்பனை, காட்சியமைப்பு ஆகிய புறப்பொருட்களால் உணர்த்துவது "ஆஹார்ய அபிநயம்".

முகத்தாலும், மெய்சிலிர்த்தல் போன்ற உடலில் காணப்படும் உள்ளுணர்வுகளின் பிரதிபலிப்புக்களால் புலப்படுவது "சாத்வீக அபிநயம்". இந்த அபிநயங்கள் இரண்டு விதமாக சித்தரிக்க வாய்ப்பளிக்கின்றன. ஒன்று இயல்பான உலக வழக்கு (லோக தர்மி) மற்றொன்று, உலக இயல்புக்கு சற்று அப்பாற்பட்டு கலை வடிவத்திற்கு முதலிடம் அளிக்கும் நாடக வழக்கு (நாட்டிய தர்மி) உதாரணமாக கண்ணீர் சிந்தி நடிப்பது லோகதர்மி. கண்ணீர் சிந்துவது கையாடை காட்டுவது நாட்டிய தர்மி.

அடுத்து, இக்கலையின் முக்கியமான அம்சம் "அரைமண்டி" எனக் கொச்சைத் தமிழில் வழங்கிவரும் மண்டல ஸ்தானமாகும். அந்த நிலையே இக்கலைக்கு மூலாதாரவடிவமாக இருக்கின்றது. பாதங்கள் பக்க வாட்டில் திருப்பி முழங்கால்களை வளைத்து சீராக நிற்பது மண்டல நிலை. இந்நாட்டியத்தில் அடவுகள் என்று கூறப்படும் பல அசைவுகள், இதனையே அடிப்படையாகக் கொண்டது. அடவுகளுக்கு பாதத்தைத் தான் அதிகமாக உபயோகிக்கின்றோம். இவை தட்டடவு, நாட்டடவு, குத்தடவு, மெட்டடவு தவிர அதன் சேர்க்கைகளேயாகும்.

மேலும் இந்நாட்டியம் சாதாரணமாக "மத்திய வலயத்திலே" ஆடப்படும். மண்டல ஸ்தானத்தைக் கையாளுவதால் சாதாரணமாக மிகத் துரிதமாக ஆடமுடியாது. அடுத்து இந்நடனத்திற்கு இன்றியமையாதது வாய்ப்பாட்டு. இது கர்நாடக இசையையே அடிப்படையாகக் கொண்டது. மிருதங்கம் இதற்கு ஒரு முக்கியமான பக்கவாத்தியமாகும். நட்டுவனார் ஆட்டுவிக்க உபயோகிக்கும் கைத்தாளம் நடனத்திற்கு இயக்குனர் பயன்படுத்தும் கருவியாகும். நட்டுவாங்கம், வாய்ப்பாட்டு, மிருதங்கம், முகவீணை, சுருதிப்பெட்டி ஆகியவை சேர்ந்து இக்கலைக்கு இசைக்குழுவாக விளங்கி வருகின்றது. இக்கலையை முறைப்படி பயில்வதானால் 4-6 வருடங்கள் தேவையாகும். இதனைப் பயின்று முழுமையான தேர்ச்சி பெற்றால் எந்த வகையான ரசிகர்களின் கவனத்தையும் ஈர்க்கலாம்.

இந்த உன்னதமான கலையைப் பயில்வதன் மூலம் அழகிய ஆரோக்கியமான உடலமைப்பை மட்டுமில்லாமல் அன்பு, பண்பு, சக்தி, பொறுமை, சாந்தம், கட்டுப்பாடு போன்ற நற்பண்புகளையும் பெற்றுக் கொள்ளலாம்.

தரணி போற்றும் தமிழர் பண்பாடும், தமிழர் நாகரீகமும் எண்ணும் தோறும் இன்பம் தரத்தக்கவை. நம் பண்பாட்டைப் பிரதிபலிக்கும் இப்பரதக்கலை இன்று உலகெங்கும் தமிழர் பெருமையைப் பறை சாற்றிக் கொண்டிருக்கின்றது. இதற்கு வரைவிலக்கணம் கூறுவதானால் இவை மட்டுமல்ல இன்னும் எழுதிக் கொண்டே போகலாம். தனித்துவமிக்க பழம்பெரும் இப்புனிதக்கலை ஆல்போல் தழைத்து அறுகுபோல் வேரூன்றி வானமும், வையமும் உள்ளவரை பல்லாண்டு காலம் வாழ்க, வளர்க என வாழ்த்துகின்றேன்.

**- திருமதி. மேரி ஸ்ரெல்லா கிறிஸ்ரியன் -**

# மிளிரும் மாணவம்

சிவலிங்கம் சிவபாலன்

இது ஒரு சஞ்சிகை. இதைக் கையில் எடுத்ததும் இதன் தோற்றம் மூன்றாம் உலக நாடுகளில் இருந்து வெளிவரக்கூடியதுமானதும், பொதுவாக வறுமையின் அடையாளத்தைப் போர்த்தியதுமான அதே வேளை, புருவங்களை உயர்த்தவல்லதுமான தோற்றத்தையே கொடுக்கிறது.

மூன்றாம் உலகநாடுகளில் இருந்து வரவல்ல சஞ்சிகைகள் அதுவும் முற்போக்கு இலக்கிய சஞ்சிகைகள், குறிப்பாக தமிழ் இலக்கியத்தின் ஆணிவேராக, ஒடுக்கப்பட்டுக் கொண்டிருக்கும் பாட்டாளி ஏழை மக்களின் ஒருமித்த எழுச்சிக்குரலாக வந்துகொண்டிருக்கக் கூடிய சஞ்சிகைகளின் தோற்றத்தை உற்று நோக்கினால் அதன் கறுப்பு, வெள்ளை எழுத்துக்களும், அதி குறைந்த பட்ச விலையிலுள்ள தாழ்களிலேயே பிரதிபண்ணப்பட்டதுமான சஞ்சிகையின் தோற்றமும், உள்ளே தொலைநோக்கு சிந்தனைகளும் அதனுடன் கூடியதுமான வித்தியாசமான பார்வைகளைக் கொண்டதும், காத்திரமான படைப்புக்களையும் தாங்கிவருவதையும் இதுவரை நாம் கண்டிருக்கிறோம்.

வண்ண ஒளிபாச்சலுக்கும் ஊளைச்சதையின் அதிகப்படியான திரட்சிகளுக்கும் முக்கியத்துவம் கொடுத்து பணம்பண்ணும் பேரவாக் கொண்ட பல்லாயிரம் நாலாந்தர சஞ்சிகைகளைக் கண்டுகளித்த இவ்வேளையில் வெறும் கருத்து ஒன்றை மட்டுமே தாங்கிவந்த இச் சஞ்சிகையைக் கையிலெடுத்ததும் எனக்கு எதுவும் வியப்பாக தோன்றவில்லை.

விடயம் கனதியாகவும் மக்களுக்கு அது தேவையாகவுமிருப்பின் அது சென்றடைய வேண்டிய இடங்களை கண்டிப்பாகச் சென்றடையும் என்கின்ற பொதுவான அபிப்பிராயம் என்னளவில் உண்மையென்பதை இற்றைவரையல்ல என்றைக்குமே உண்மையென்பதை ஏற்றுக் கொள்ளும் வகையிலே இச்சஞ்சிகையைக் கருத்திலெடுக்கிறேன்.

அதுவும் இவ்வளவு வசதிவாய்ப்புக்கொண்ட பிரித்தானியாவிலிருந்து இவ்வளவு அடக்கமான குறைந்த பட்ச பொருளாதார மூலதனத்துடன் அதுவும் மாணவ அமைப்பினால் உருவாக்கப்பட்டதினால் சற்று சிந்திக்க வைக்கிறது என்றால் எதுவும் வியப்பில்லை.

NATIONAL STUDENT LEAQUE இதுதான் இந்த சஞ்சிகையின் பெயரென்றும் கொள்ளலாம், அடையாளமென்றும் கொள்ளலாம். எவ்வித விளம்பரங்களுமற்ற, பிரச்சார நோக்கமற்ற சேவை மனப்பான்மை கொண்ட கூவலாகவே காணப்படுகிறது. அவர்களது முகவரி WWW.STU LEAG. COM என்பது மட்டுமாம்.

பிரான்ஸ் நாட்டிலும் எம் மாணவர்களினால் இது போன்ற சட்ட ஆலோசனை நிலையம் SAINT - DENIS என்னுமிடத்தில் நடைபெற்றது அல்லது நடைபெற்றுக் கொண்டிருக்கிறது என்பதையும் இங்கு சுட்டிக் காட்டுதல் பொருத்தமாகிறது.

பட்டப்படிப்புக்காக இலங்கையில் வருடாவருடம் பத்தாயிரம் பேர் (தகவல் - அண்மைய வீரகேசரி வார வெளியீடு) பல்கலைக்கழகம் செல்கிறார்கள். எண்ணாயிரம் பேர் வருடாவருடம் தம் பட்டப்படிப்பை முடித்துக் கொண்டு தொழில்பெறவென நாட்டில் உருவாக்கப்படுகிறார்கள்.

இதுபோலவே பிரித்தானியாவில் வருடாவருடம் அறுபதாயிரம் மாணவர்கள் (தகவல் : FINANCIAL TIMES) பல்கலைக்கழகம் தொடக்கம் தொழில்நுட்பநிறுவனம் வரை அனுமதிக்கப்படுகிறார்கள். அவர்களில் ஏறத்தாழ முப்பதாயிரம்பேர் தமது பட்டப்படிப்பை முடித்துக் கொண்டு வெளியேறுகிறார்கள். பல்வேறு காரணங்களினால் தமது படிப்பை இடைநிறுத்திக் கொள்கிறார்கள் அல்லது முறித்துக் கொள்கிறார்கள். பணக்கார நாடென்பதால் சகல மாணவர்களும் தமது பட்டங்களைப் பெற்றுத்தான் பெரும் நிறுவனங்களைப் பொறுப்பேற்க வேண்டிய நிலையில் அவர்கள் இல்லையென்பதும் தெரியவருகிறது.

மேற்படி பல்கலைக்கழகங்களில் இருந்து வெளியேறும் மாணவர்கள் சிலர் சேர்ந்து தத்தமது அறிவை மற்றவர்களுக்குப் பிரயோசனமான முறையில் செலவு செய்தாலென்ன என்ற அடிப்படையில் உருவான நோக்கம் தான் இந்த சஞ்சிகை மூலமான அறிவிப்பு

DON'T CALL US REALLY !
WE'LL CALL YOU, I PROMISE

அதாவது நீங்கள் அழைக்க வேண்டாம் உண்மையாகவே நாங்கள் உங்களை அழைக்கின்றோம் இது சத்தியம்... இவ்வளவுந்தான்

கவர்ச்சிகரமான விளம்பரமாக இது தோன்றினாலும் உண்மையான நிலை என்னவெனில் வேலைப் பளுவுடன் கிடைக்கக் கூடிய நேரத்துளிகளுக்குள் தமக்குத் தேவையானவற்றை அதாவது அது ஆலோசனையாக இருந்தாலென்ன அது உதவியாக இருந்தாலென்ன தெரிந்துகொள்ள வேண்டியவற்றைத் தெரிந்து கொள்ளும் வழிமுறையிலிருந்தாலென்ன அவற்றை எங்கிருந்து எப்படித் தெரிந்து கொள்வதிலுள்ள சிக்கல்களைப் போக்கி உதவும் தன்மைகளையொத்ததாகவே தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

அதாவது சகல துறைகளிலிருந்து மனிதன் அன்றாட வாழ்க்கையின் தேவைகளை ஓரளவாவது நிவர்த்தி செய்யக் கூடியதான மனப்பான்மை கொண்ட மாணவர் குழாம், இப்படியானவோர் ஆக்கபூர்வமான செயல் திட்டங்களை வகுத்து மனிதரின் மன ஆழத்திலிருந்து அவர்களை விடுவிப்பதும் மேலதிக கொடுப்பனவாகவோ அல்லது கூலியாகவோ விரயமாக்கப்படும் பணத்தையும் நேரத்தையும் மீண்டும் அந்தந்த பாவனையாளரிடமே திருப்பிக் கொடுப்பதுமான ஒரு சேவை நிலையத்தை இவர்கள் உருவாக்கியிருக்கிறார்கள் என்பதுவும் வரவேற்கப்பட வேண்டிய விடயமாகின்றது.

தெரிந்தோ தெரியாமலோ பெரிய நிறுவனங்களிடமோஅன்றி பணம்பறிக்கும் முகவர்களிடமோ மனிதர் அல்லது பாவனையாளர்கள் சிக்கிவிடக் கூடாதென்பதை கருத்திற் கொண்டு உருவாக்கப்பட்ட இந்த குழுமத்தில் கணனித் தொழில்நுட்பத்திலிருந்து கைவிரல் நகப்பூச்சுக்கான ஆலோசனை முதல் அருகிலிருந்து அவற்றைத் தாமே செய்து கொடுப்பதான உத்தரவாதம் வரை தெரியப்படுத்தப்பட்டிருக்கிறது.

பிரித்தானியா என்பதுவும் அவர்களுக்கான இந்த சேவை நிலையம் என்பதுவும் பிரித்தானிய மக்களுக்கும் சரி புலம்பெயர்ந்து வந்த எம்மவர்க்கும் சரி ஆங்கிலம் என்பது ஓரளவு பரிச்சயமான மொழி என்பதால் இது பெரிதுபடுத்தத் தேவையில்லை. அதே வேளை ஆங்கிலத்தை பேச்சு மொழியாகவும், பயிற்று மொழியாகவும் இல்லாத மற்றைய நாடுகளில் எம்மவர்கிடையேயான பேச்சுமொழியென்பது மிகுந்த சிரமத்தின் மத்தியில்தான் காணப்படுகிறது.

உதாரணமாக ஒரு பொருளின் உதிரிப்பாகத்தைப் பெறுவதற்கோ அல்லது பழுதுபார்ப்பதற்கோ மொழி பற்றாக்குறையென்பது ஒரு பாரிய பிரச்சனையாக உருவெடுத்திருக்கும் இவ்வேளையில் புலம்பெயர் நாடுகளில் அந்தந்த மொழிகளிலும் அவற்றோடிசைந்து பாண்டித்தியம் பெற்ற எம்மவரால் இத்தகைய முன்னெடுப்புக்கள் சகல மட்டங்களிலும் முன்னெடுத்துச் செயல்படுத்தப்பட வேண்டிய காலகட்டமும் இதுவாகும். இது உடனடித் தேவையாகும்.

தற்கால விஞ்ஞான தொழில்நுட்ப அபரிதமான வளர்ச்சியின் காரணமாக நிறைவேற்றப்பட்டு வரும் நவீன கண்டு பிடிப்புக்களில் பெரும்பாலனவை பற்றிய எவ்வித குறைந்தபட்ச அறிவையும் கொண்டிராத எம்மவருக் கிடையேயான புரிதல் மொழியின் பற்றாக்குறை களை யப்பட்டு மேற்படி மணவ சமுதாயத்தின் பங்குபற்று தலுடன் கூடிய அமைப்புக்கள் மேலும் மேலும் உருவாக்கம் பெறவேண்டும்.

இயலுமானவர்களின் கரிசனையால் இயலாதவை இல்லாதொழிக்கப்பட வேண்டும். கற்ற அறிவின் விரிசல் சகலமானவரையும் கடந்து நிலைபெற வேண்டும்.

# மாவீரர் 2003 கலைத்திறன் போட்டிகளில் எமது சங்கத்திற்கூடாக கலந்துகொண்டு வெற்றி வாகை சூடிய எமது சிறார்கள்



பெனிஸ்ரன் சந்திரன்
பேச்சு : 1ம் இடம்
(6 வயதிற்குட்பட்டோர் பிரிவு)



மனோகரன் கிருசாந்தி
ஓவியம் : 2ம் இடம்
(9 வயதிற்குட்பட்டோர் பிரிவு)



எமர்லினா விழு
பேச்சு : 1ம் இடம்
ஓவியம் : 2ம் இடம்
(12 வயதிற்குட்பட்டோர் பிரிவு)



மிதுன் கமில்ரன்
ஓவியம் : 1ம் இடம்
(9 வயதிற்குட்பட்டோர் பிரிவு)



சாம்சன் சுலோஜனா
பேச்சு : 3ம் இடம்
(12 வயதிற்குட்பட்டோர் பிரிவு)

# பிரெஞ்சு இலக்கியவாதி அல்போன்ஸ் து லமார்த்தீன்

பத்தொன்பதாம் நூற்றாண்டுப் பிரஞ்சு இலக்கியவாதிகளில் ஆழமான, நேரடியான அரசியல் ஈடுபாட்டைக் கொண்டவர் யாரென்ற கேள்விக்கு, அது அல்போன்ஸ் து லமார்த்தீன் என்ற பதில் தடையின்றி முன்மொழியக்கூடியதாகும்.

முடியாட்சியின் மீதான விசுவாசம் கொண்ட தந்தைக்கும், மத்தியதர பூர்ஷூவாக் குடும்பத்தைச் சேர்ந்த தாய்க்கும் (1790 ல்) மகனாய்ப் பிறந்தார் லமார்த்தீன். பாரிஸிலிருந்து தென் கிழக்காக அண்ணளவாக முன்னூறு கி.மீ தூரத்திலமைந்துள்ள மக்கோன் என்னுமிடமே இவரின் பிறப்பிடமாகும். கண்ணுக் கெட்டிய தூரம் வரையிலான திராட்சை வயல்களும், குன்றுகளும், இயற்கைச் செழிப்பும் வனப்பும் நிறைந்த இப்பிரதேசத்தில் பிறந்ததாலோ என்னவோ லமார்த்தீனின் கவிப்படைப்புகள் இயற்கையின் எழிற் காட்சிகளை வாரிவழங்குகின்றன. சோண் நதிக்கரையை அண்டி நீளும் இப்பிரதேசம் இன்றும் சிறப்புமிக்க வைன் உற்பத்திக்கான பிரதேசமாகக் கருதப்படுகிறது.

இப்பிரதேசத்தில் இருபது வயதுவரைக்கும் பூர்ஷூவாச் சோம்பல் வாழ்விற்குள் வளர்ந்த லமார்த்தீன், புராதன-லத்தீன் இலக்கியப் படிப்புகளின் பின் ஷத்தோபிறியோன், பைறொன் போன்ற செவ்விலக்கிய-ரோமான்ரிச எழுத்தாளர்களினால் மிகவும் கவரப்பட்டார்.

இருபத்தியொரு வயதிலான இத்தாலிக்கான பயணமொன்று லமார்த்தீனின் வாழ்க்கையில் பல திருப்பங்களை உருவாக்குகின்றது.

பிரான்சுக்கு மீண்டும் வந்து, பதினெட்டாவது லூயி மன்னனின் மெய்க்காப்பாளராகவிருந்து, சலிப்படைந்து, வேலையைக் கைவிட்டுவிட்டுப் பல பயணங்களை மேற்கொள்கிறார் லமார்த்தீன். தனது முப்பத்தியாறாவது வயதில், வேலையின்மையாலும் ஏது செய்வதென்றறியாததுமான ஒரு சூழ்நிலையிலும், தான் நோயுற்றதாகக் கருதும் லமார்த்தீன் சுகமுறுவதற்காகச் சென்ற இடத்தில், சவுவா மலைப்பிரதேசத்தில், முன்பின்னறியா ஒருவரின் மனைவியான சார்ல் யூலி என்ற பெண்ணுடன் காதல் உறவில் வீழ்கின்றார். இருபக்க உடன்பாடுடைய இக்காதலுறவின் பால் லமார்த்தீன் எழுதிய கவிதைகள் சர்வதேசப் புகழ் பெற்றவை.

1820-30க்குமிடைப்பட்ட காலத்தில் இத்தாலியில் பிரான்ஸின் இராஜதந்திர அலுவலராகக் கடமையாற்றியபோதும், 1830 ல் பிரான்ஸில் ஏற்பட்ட அரசியல் மாற்றங்களினால், முடியாட்சி ஆதரவாளராகவிருந்த லமார்த்தீனின் அரசியற் போக்குகளில் மாற்றங்கள் உண்டாகி, குடியரசுவாதக் கருத்துக்களால் ஈர்க்கப்பட்டு, தனது இராஜதந்திரப் பொறுப்புகளைக் கைவிட்டுவிட்டு, முடியரசுக்கெதிரான நேரடியான அரசியலில் ஈடுபடுகின்றார். ஆரம்பத்தில் தோல்விகளைச் சந்தித்த போதும், அரசியலமைப்புடன் கூடிய முடியாட்சியின் பிரஞ்சுப்பாராளுமன்றத்தில் உறுப்பினராகத் தெரிவு செய்யப்பட்ட லமார்த்தீன் எந்தக் கட்சியுடனும் கூட்டுச்சேராது பாராளுமன்றத்தில் தனது காரியங்களினாலும், அதே நேரத்தில் கவரச்சி நிறைந்த உரைகளினாலும் மிக விரைவில் புகழ்பெற்ற ஒரு அரசியற் பிரமுகராக உருவாக்கம் கொள்கின்றார். 1848 ல் நடைபெற்ற புரட்சியின் பொது லூயி-பிலிப் பிரான்ஸை விட்டுத் தப்பியோடிய நிலையில் பிரான்ஸின் இரண்டாவது குடியரசு உருவாக்கப்பட, இடைக்கால அரசின் தலைவராகவும் லமார்த்தீன் தெரிவு செய்யப்படுகிறார்.

இக்காலத்திலான லமார்த்தீனின் அரசியற் சாதுரியங்களும், அவரின் பிரபல்யம் பெற்ற அரசியலுரைகளும் பத்தொன்பதாம் நூற்றாண்டின் பிரஞ்சு அரசியல் வரலாற்றின் பல பக்கங்களை அழகூட்டியவை. இது பற்றிய விரிவான விவரணம் பிறிதொரு பிரிவாகக் கருதப்படவேண்டியது. சினங்கொண்ட மக்கள் கூட்டத்தை வாய்மொழியால் அடக்கி வழிநடத்திய தலைவர்களின் வரிசையில் லமார்த்தீனும் கருதப்படவேண்டியவர். இருந்தபோதும், அரசியலுலகால் ஏமாற்றங் கொண்ட, 1851ல் நடைபெற்ற தேர்தல் களில் தோல்வியடைந்த நிலையில், இவர் முற்றுமுழுதாக அரசியலிலிருந்து ஒதுங்கிவிடுகிறார்.

-------

ஓடிக்கொண்டிருக்கும் காலம் ஊட்டும் அச்ச உணர்வு லமார்த் தீனின் கவிதைகளில் பல இடங்களில் தென்படுகிறன்ற போதிலும், ஏரி என்ற சர்வதேசப் புகழ்பெற்ற அவரின் கவிதையில் இது மிகத் துல்லியமாகக் காணப்படுகின்றது. தன் இன்புணர்வை நீடிப்பதற்காக நேரத்தை நிறுத்த வேண்டும் கவிஞர், அதேநேரத்தில், தன் சுயநலத்தையுணர்ந்து துன்பப்படுவோரின் துன்பத்தைக் கருத்திலெடுத்து, காலமே தரிக்காது ஓடு என்று கட்டளையிடுவது கவிஞனுக்கேயுரித்தான மனதாபிமாத்தை வெளிப்படுத்துகிறது.

Éternité, néant, passé, sombres abîmes,
Que faites-vous des jours que vous engloutissez ?
Parlez : nous rendrez-vous ces extases sublimes
Que vous nous ravissez ?

நித்தியகாலமே, சூனியமே, இறந்தகாலமே, கரும்பாதாளங்களே,
விழுங்கும் எங்கள் நாட்களை என்னதான் செய்கிறீர்கள் ?
கூறுங்கள்: எம்மிடமிருந்து கொள்ளை கொள்ளும் உன்னத
இன்புணர்வுகளை மீளத்தருவீர்களா?

« Ô temps ! suspends ton vol, et vous, heures propices !
Suspendez votre cours :
Laissez-nous savourer les rapides délices
Des plus beaux de nos jours !

ஓ காலமே ! உன் பயணத்தை இடைநிறுத்து, கூடிவரும்
நல்வேளைகளே,
உங்கள் ஓட்டத்தை இடைநிறுத்துங்கள் !
நம் வாழ்வில் விரைந்தோடும் உன்னதச் சுவையின்பங்களை
சுகித்துணர நமை விடுங்கள் !

« Assez de malheureux ici-bas vous implorent,
Coulez, coulez pour eux;
Prenez avec leurs jours les soins qui les dévorent,
Oubliez les heureux.

துன்பத்துழல்வோர் பெருவாரியிங்கிருக்கின்றார்,
ஓடுங்கள், அவர்களுக்காக ஓடுங்கள்,
அவரை அரித்துண்ணும் துன்பங்களையும் கொண்டு
செல்லுங்கள்.
இன்புறுவோரை மறவுங்கள்.

எங்கும் பரந்திருக்கும் இயற்கையின் எழிலை அழகான மொழியில் கவிதைகளாகத் தீட்டியவர் லமார்த்தீன். "கவித்துவத் தியானங்கள்" எனும் அவருடைய தொகுப்பு வெளியானபோது பிரஞ்சு இலக்கிய உலகம் அதையொரு புதுமைமிக்க படைப்பாகக் கருதியது. அவ்வாறே "புதிய கவித்துவத் தியானங்களும்" கருத்துச் செறிவும், உயர் சிந்தனைகளுமடங்கிய படைப்புகளாகும்.

"தனிமை", "இலையுதிர்காலம்", "அறிவுடைமை" போன்ற கவிதைகள் கருத்தாழமும் , அனுபவத் தடயங்களும் நிறைந்தவை.

"புரட்சிகள்" எனப்படும் நீண்ட கவிதை மக்கள் எத்தனிக்கும் புரட்சிகள் மீதானதும், அவர்களின் போக்குகள் மீதானதுமான ஒரு அரசியல் அனுபவசாலியின் தீர்க்கதரிசனங்களாக வெளிப்பாடடைகின்றன.

# நல்லதே நினைப்போம் நன்மையே செய்வோம்

## சுவிஸில் எமது மண்ணுக்கான பணி

சுவிஸ் நாட்டில் எமது ஒன்றியமானது 1992, 93 காலப்பகுதியில் உதைபந்தாட்டத்திற்காக பாடும் மீன் கழகத்தின் பெயரைத் தாங்கி இயங்கி வந்தது. அக்காலத்தினுள் மிக நிறைவாக வெற்றிக் கிண்ணங்களை தமதாக்கிக் கொண்டது அனைவரும் அறிந்ததே.

தொடர்ந்து விளையாட்டு வீரர்கள் குறைவாக இருந்தமையால் கழகத்தை இடை நிறுத்தி அனைவரும் சேர்ந்து எமது சமுதாயத்தின் கல்வித் தேவையினை உணர்ந்து கல்வி முன்னேற்றக் கழகமாக இயங்கி ஆதரவு கோரி அனைவரின் உதவியுடன் சென் ஜேம்ஸ் மகா வித்தியாலயம், சென். ஜேம்ஸ் மகளிர் வித்தியாலயம் ஆகியவற்றிற்கு பாடசாலைக்கு தேவையான உபகரணங்கள், மின்பிறப்பாக்கி, நூலக அபிவிருத்தி, புலமைப் பரிசில், பரீட்சை ஒழுங்கமைப்பு, க.பொ.த. பரீட்சை பயிற்சி நூல்கள், தொண்டர் ஆசிரியர் வேதனம் என்பன செய்யப்பட்டது. மொத்தம் 1 24 700.00 (ஒரு இலட்சத்து இருபத்தி நான்காயிரத்து எழுநூறு ரூபா), அதன்பின்பு புனித யாகப்பர் ஆலய புனரமைப்புக்காக நிதி சேகரித்து கொடுத்திருந்தோம். இந்நிதி சேகரிப்புக்கு குருநகர் மக்கள் நிறைவாகவே பங்களிப்பு செய்திருந்தார்கள்.

பின்னர் போராட்ட காலத்தில் இடப்பெயர்வு ஏற்படுத்திய துயரத்தால் எமது சமுதாய மக்கள் தொழிலின்றி வறுமைக் கோட்டிற்கு கீழே தள்ளப்பட்டபோது அங்கு குடியிருந்த 72 குடும்பங்களுக்கு தலா ஆயிரம் ரூபா வீதம் (72 000.00) கொடுத்து உதவி செய்தோம். கடந்த 2000 ஆம் ஆண்டிலிருந்து நிறைவாக எமது சமுதாயத்திற்கு ஏதாவது செய்ய வேண்டும். அதனையும் ஓர் நிர்வாக மயப்படுத்தி அதன் மூலம் குருநகர் மக்களையும் ஒன்றிணைத்து இயங்கவேண்டுமென்பதே பலரது விருப்பமாகவிருந்தது. முன்னர் கல்வி முன்னேற்றக் கழகமாக இயங்கி வந்த எமது கழகத்திற்கு தற்போது புலம் பெயர் சுவிஸ் வாழ் குருநகர் மக்கள் ஒன்றியம் எனப் பெயரிடப்பட்டுள்ளது. எமது ஒன்றியத்தின் விருதுவாக்காக "நல்லதே நினைப்போம் நன்மையே செய்வோம்" என்ற சொல்பதம் அமைக்கப்பட்டுள்ளது.

சுவிஸ் வாழ் குருநகர் மக்களின் இவ் நடப்பு ஆண்டுக்குரிய

**தலைவர் : பிரான்சிஸ் றெஜி றேமன்ட் (ஜீவா)**


**செயலாளர் : வின்சன்ட் பீற்றர் டியூக்**

**பொருளாளர் : அல்வீனப்பர் சாள்ஸ்**

இவர்களுடன் 11 நிர்வாக உறுப்பினர்கள் சேர்ந்து ஒன்றியத்தினை வழி நடத்தி வருகின்றார்கள். ஆரம்ப கட்டமாக சென்ற ஆண்டு 2002ம் ஆண்டு மார்கழி மாதத்தில் தாய் தகப்பனை இழந்த பிள்ளைகள் 30 பேர், விதவைகள் 10 பேர். மொத்தமாக 40 பேருக்கு தலா ஐயாயிரம் ரூபா வீதம் வழங்கி இவர்களின் எதிர்காலம் சுவீட்சமாக அமைய வேண்டும் என எண்ணியதால் வங்கியில் நிரந்தர வைப்பில் இடப்பட்டுள்ளது. இதனை விட இந்த ஆண்டு ஆனி மாதத்திலிருந்து பிறவியிலேயே ஊனமடைந்த இருவருக்கு மாதாந்த உதவி நிதியாக ரூபா ஐநூறு கொடுத்து வருகின்றார்கள். 2003 ஆடி மாதம் 40 பேருக்கு தலா ஐயாயிரம் ரூபாவும் 10 விதவைகளுக்கு ஐயாயிரம் ரூபாவும் கொடுக்கப்பட்டது. இந்நிலையில் தற்போது நாட்டில் ஏற்பட்டுள்ள சமாதான சூழ்நிலை காரணமாக அங்கு செல்லும் எமது ஒன்றியத்தின் அங்கத்தவர்கள் சிலர் தனிப்பட்ட விதமாக இரண்டு பாடசாலையிலும் பணி புரியும் தொண்டர் ஆசிரியர்களுக்குரிய வேதனங்களைக் கொடுத்து வருகிறார்கள் என அறியத் தந்துள்ளார்கள். இவ்வாறாக சுவிஸ் மக்கள் தமது மண்ணின் மக்களை மறவாது என்றும் நல்லதையே நினைத்து அரும்பெரும் நற்காரியங்களை செய்து வருகின்றார்கள்.

**- செயலாளர்**

உங்கள் அனைத்து தேவைகளையும் ஒரே
இடத்தில் பூர்த்தி செய்துகொள்ள



**KUMARS SHOP**

193, Rue du Fbg. Saint-Denis
75010 Paris
Tél: 01 42 05 41 36

**MODERN'BAT**



BERNARD ALEXANDER


ETUDE ET REALISATION

Bat . F . Rue Jean Jaures
95350 St. Brice S/Foret

**G. S. M. 06 03 89 09 86**

**GANDHI**

Restaurant Indien




**22, Rue Cail, 75010 Paris**

Tél: 01 40 05 09 00
Fax: 01 40 05 13 36

M°: La Chapelle / Gare Du Nord

அழகுக்கு அழகு செய்யும்
அதி நவீன சிகையலங்காரம் செய்து கொள்ள

லாவனியா சலூன்



அனைத்து விதமான சர்வதேச
தொலைபேசி அட்டைகளை
மலிவு விலையில் எம்மிடம் பெற்றுக்கொள்ளலாம்

Indran Ananthan

**LAVNIYIA COIFFURE**

348, rue des Pyrenées, 75020 PARIS.
M° : Pyreées ou Jourdain - Bus : 26